மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

1962ல் நாம் தோற்றால் 25 வருடங்களுக்கு தலைகாட்ட முடியாது!

உண்டியல் வையுங்கள், காங்கிரசை விரட்ட வழி செய்யுங்கள்!

நீங்கள் எதையும் சாதிக்கும் வல்லவர்கள் உங்களை நம்பியே நான் இருக்கிறேன்!

வெற்றிவாகை சூட

அறிஞர் அண்ணா அழைப்பு!

சென்னை 11-வது வட்டம் ஏழுகிணறு இலட்சிய நடிகர் நாடக மன்ற ஆண்டு விழாவும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் எம். எல். சியாக வெற்றி பெற்றதைப் பாராட்டுவதற்கும் ஏழுகிணறு பாரக்ஸ் தெருவில் ஒரு வீட்டு மாடி மீது கூட்டம் நடைபெற்றது. இந்த வட்டத்தில் கூட்டம் நடத்த போலீசார் அனுமதி கிடைக்காததால் தான் மாடி மீது கூட்டம் நடைபெற்றது!

கூட்டத்திற்கு திரு. லட்சுமிபதி தலைமை வகித்தார்!



திருவாளர்கள் மு. வரதராசன் தூயமணி, அன்பரசன், நகரமன்ற உறுப்பினர் வி.முனுசாமி, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினார்கள்.

இலட்சிய நடிகர் மன்றத் தலைவர் புதுவை தூயமணி அவர்கள் நடிப்பிசைப் புலவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்!

பின் பல மன்றங்கள்சார்பில்நடிப்பிசைப் புலவருக்கு மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணுவிக்கப்பட்டது!

பின் கே. ஆர். ராமசாமி அவர்கள் தம் பாராட்டுக்குப் பதிலளித்து தான் வெற்றி யடைந்த விபரத்தையும், கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும் விளக்கமாகப் பேசினார்!

பின் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட கை ஒலிகளுக்கிடைடிய பேசியதாவது: —

அன்புள்ள தலைவர் அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

இந்த வட்டத்தில் இலட்சிய நடிகர் மன்ற ஆண்டு விழாவும், நமது நண்பர் கே. ஆர். ராமசாமி மேல் சபைக்கு வெற்றி பெற்றதைப் பாராட்டுவதற்கும் கூடியிருக்கிறோம்! இதில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்!

இன்று இந்தக் கூட்டம் நடைபெறுவதைப் பார்த்தால் மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது!

அரசியல் கூட்டங்களும் நாடக மேடை போல் ஆகி விட்டது!

இந்தக் கூட்டத்தை நடத்தும் மன்றத்தார் நாடகம் மன்றமானதாலும் பாராட்டப்படுகிறவர் ஒரு நடிகர் ஆனதாலும் இந்தக் கூட்டமும் நாடக மேடையில் நடிகர்கள் தோன்றுவது போல் பேச்சாளர்களும் தோன்ற வேண்டியிருக்கிறது!

இன்று இந்தக் கூட்டம் நடைபெறுவதற்குண்டான சங்கடங்களை நமது நண்பர் திரு. முனுசாமி எடுத்துக் கூறினார்! இன்று நாங்கள் மாடி மீது நின்று பேசுகிறோம்! நீங்கள் கீழே இருந்து கேட்கிறீர்கள். உங்களைப் பார்த்துப் பேச முடியவில்லை!

இன்று நாட்டில் ஜனநாயகம் வளர்ந்து வரும் இந்த நாளில் மக்களைச் சந்தித்துப் பேசுவதற்கும்தடையேற்படுகிறது! இது இப்படி நீடித்தால் ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாகும், இது பேச்சு சுதந்திரத்திற்கு தடை போடுவதாகும். இதற்கு அதிகாரிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 8-5-60 — ஒலி 27

தாலமுத்து, நடராஜா !
தாலமுத்து, நடராஜா !!

"1965-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியை அரசாங்க மொழியாக்க வேண்டும்" என்று இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் இன்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்! 1965-ம் ஆண்டுக்குப் பின்பு ஆங்கில மொழி துணை மொழியாக இருக்கு மென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

எதைச் சொல்லுவது, எதை எழுதுவது? சொல்லி, சொல்லிப் பார்த்தாய் விட்டது! எழுதி, எழுதி ஏடுகளை திறப்பியாகி விட்டது!

கண்ட பலன், கிடைத்த லாபம் என்ன?

ஏறத்தாழ மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டை அடிமைப் படுத்திய வெள்ளைககாரன் ஆங்கில மொழியைப் புகுத்தினன், அதுவே ஆளும் மொழி என்றும் உத்திர விட்டான்! அதற்குப் பின்பு—வெள்ளைக்காரனை துரத்தியடித்து விட்டு நமது நாட்டை அடிமைப் படுத்தி ஆட்சி புரியும் வடவர்கள், தங்களது இந்தி மொழியை ஆட்சி மொழி என்று அறிவித்திருக்கின்றனர்!

அப்படி என்ருல்—தமிழா! உனக்கென்று ஒரு மொழி கிடையவே கிடையதா? உன்னைப்பெற்று வளர்த்த பொன்னுடு மொழியற்ற நாடா? உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தாளே உன்தாய்—அவள் எந்த மொழியில் உன்னைப் பாராட்டினுள். சீராட்டி மகிழ்ந்தாள்? சொல்லடா, சொல்! சொல்ல வெட்கமாக இருக்கிறதா ? வெட்கப்படாமல் சொல், வேதனைப் படாமல் சொல்!

தம்பி! நீ, சின்னஞ் சிறுவயதில் "அம்மா! அம்மா!" என்று அழைத்தாயே—அது எந்த மொழி? அந்த மொழி—பேச, பேச நா இனிக்கும் அந்த செந்தமிழ் மொழி இன்று எங்கே? செந்தீயால் மாய்ந்து விட்டதா? செப்படா மகனே! செப்பு!

இல்லை, இல்லை, இல்லை, இல்லை என்ருல், எங்கே அதற்கு செங்கோல், எங்கே அதற்கு அரியாசனம்! ஏனடா விழிக்கிருய்?

உனக்கென ஒரு நாடில்லையா? உனக்கென ஒரு நாகரீகமில்லையா? உனக்கென ஒரு பண்பில்லையா? உனக்கென ஒரு கலாச்சார மில்லையா? இருக்கிறது—எல்லாமிருந்தும் உன்மொழி வாழ வழி ஏன் இல்லை?

அடிமை! நீ, அடிமை! உனது நாடும், உனது மொழியும் அடிமை!

உன்னை அடிமை கொண்டவன், உன்னை என்றென்றும் அடிமைப்படுத்தி வைகக அவன் சொந்த மொழியைப் புகுத்துகிருன்! நீயோ, ஏமாந்து, சோணகிரிபோல் பல்லிளித்து, அவன் பாதம் தாங்கி கிடக்கிருய்! என்றுமே நீ, விழிக்கமாட்டாயா? என்றுமே நீ, வீறு கொண்டெழ மாட்டாயா?

இந்தி ஆட்சி மொழியாகிவிட்டது! இனி—நீ, 'அம்மா அம்மா" என்று கூப்பிட்ட மொழி செத்து மடிய வேண்டியது தான்! நீ, "அப்பா! அப்பா!" என்று கூப்பிட்டு உன் தந்தையின் பாசத்தை வளர்த்துக் கொள்வாயே அந்த மொழி—ஐயய்யோ, சொல்ல மனம் பதறுகிறது! செந்தீயில் வெந்து சாம்பலாகப் போகிறதடா, சாம்பலாகட்போகிறது! உனக்குப்பாசமிருந்தால், உன்தாய் மொழி மீது நேசமிருந்தால் உடனே துடித்தெழு! உன்தாய் மொழிக்கு வரும் ஆபத்தைத் தடுத்து நிறுத்து! இல்லையேல், "நீ கையாலாகாதவன் காட்டிக்கொடுத்த துரோகி" என்ற இழிச்சொல்லும் பழிச்சொல்லும் உன்னைத் தலை குனிய வைக்கும்!

எந்த ஒரு நாட்டையும் அடிமை படுத்த வேண்டுமானல், முதலில் அந்த நாட்டின் மொழியைத் தான் அழிக்க வேண்டும் மொழி அழிந்தால் அந்த நாட்டின் நாகரீகம், கலை, கலாச்சாரம் பண்பு அத்தனையும் அழியும்! இவைகள் அத்தனையும் அழிந்தால் அந்தநாட்டு இனமே அழிந்துவிடும்!

"நம்முடைய நாடு, தமிழ் நாடு நம்முடைய இனம் தமிழ் இனம், நம்முடைய நாகரீகம் தமிழ நாகரீகம என்று சொல்லிக் கொள்ள நமக்கிருக்கும் ஒரே ஒரு உரிமை நமது மொழிதான்! அந்த மொழியும் அழிந்து விட்டால் நமககு நாடும் இருக்காது, நாகரீகமும் இருக்காது!

நாம், இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டால் நாம் தமிழர்களாக, திராவிடர்களாக இருக்கமாட்டோம்—இந்தியர்களாகத்தான் இருபபோம்!

நாம், இந்தி மொழியை அரசாங்க மொழியாக ஏற்றுக் கொண்டால், நமது நாடு தமிழ் நாடாக, திராவிட நடாக இருக்காது—இந்திய நாடாகத்தான் இருக்கும்!

நாம், இப்போது இந்திமொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டால்—இன்னும ஒரு பத்தாண்டு காலத்திற்குள் நமக்கு சரித்திரமே இருக்காது—நாம் இருந்ததாக வரலாறே கூருது!

நம்முடைய நாடு, நம்முடைய இனம் அழியத்தான் வேண்டுமா? நம்முடைய தலைமுறை அந்த இழிச்சொல்லை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா? தமிழர்களே! திராவிடர்களே! சிந்தித்து முடிவு செய்யுங்கள்!

மக்கள் சபையில் நமது சொல்லின் செல்வர் சம்பத்து இந்திப்பற்றி பேசும் போது இந்திவெறியர்கள் கூச்சல் போட்டு குழப்பம் விளைவித்திருக்கிருர்கள்!

நம்முடைய அமைச்சர்களோ இந்தி படிக்காவிட்டால் வேலை கிடைக்காது என்று உபதேசம் செய்கிருர்கள்! இந்தி வெறியர்களுக்குள்ள உணர்ச்சி நம்முடைய அடிமை மந்திரிகளுக்கு ஒரு நாளும் வரவே வராது!

அவர்களுக்குபதவியும், பட்டமும், தான் பெரிது-நாடு பெரிதல்ல, மொழிபெரிதல்ல! எனவே நம அடிமையர்களை நம்பி இனியும் மோசம் போகக் கூடாது.

"போர்! போர! போர்!" என்று நமது அண்ணு இன்று அழைத்தபோது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஓடிவந்தனர், களம்புகுந்தனர், சிறைக் கூடம் சென்றனர்! பலர் செத்தும் மடிந்தனர்! அந்த வீரம் இன்று செத்தா மடிந்து விட்டது! அறிஞர் அண்ணுவின் தம்பிகளுக்கு ஒருக்காலும் அந்த நிலை ஏற்படாது!

நாம் அன்று இந்தியை எதிர்த்து அறப்போர் தொடுக்காதிருந்தால் இந்தி வெறியர்கள் நம்மை ஒழித்தே இருப்பார்கள், தமிழர்களுடைய பூண்டை அழித்தே இருப்பார்கள்!

அன்று நாம் செய்த தியாகம் வீண்போகாமல் இருக்க வேண்டுமானல் உடனே போர் பறை ஒலிக்க வேண்டும்! **பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே உடற்பச்சை ரத்தம் பறிமாறிடுவோம்!** என்ற வீரப்பண் இசைத்துப் புறப்படுங்கள் !

தாய்மொழிக்காக உயிரை தத்தம் செய்து கொடுத்த உத்தமர்களாம் தாலமுத்து, நடராஜன் நம்மை அழைக்கிருர்கள்! புறப்படுங்கள், உடனே புறப்படுகள்!

"வருகிறேன்—தாலமுத்து, நடராஜா, நானும் வருகிறேன்—உன்னேடு வருகிறேன்" என்று அஞ்சாத நெஞ்சோடு களம் செல்லுங்கள்!

"தாலமுத்து நடராஜா, ஏ தாலமுத்து, நடராஜா! இதோ பார்! உங்கள் கல்லறைசமீப் பக்கத்திலே என் கல்லறை" என்று கூறிப் புறப்படுங்கள்—உங்கள் தாயைக் காப்பாற்றுங்கள்!

ஜனநாயகம் பேசி, ஜனநாயகத்தைக் கொலை செய்யாதீர்கள் !

மக்களைச் சந்திப்பதற்குத் தடைவிதித்து, அவர்களுடைய— எதிர்ப்புக்களை தேடிக் கொள்ள வேண்டாம் !

(அண்ணா பேச்சு)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உடனே ஒரு வழி செய்யா விட்டால் மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்!

அதிகாரிகள் உடனே கட்சித் தலைவர்களுடன் கலந்து ஒரு வட்டத்தில் இன்னின்ன தெருக்களில் இன்னின்ன இடங்களில் தான் கூட்டங்கள் கூட்ட வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும்!

நகரில் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் தான் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும்.

அப்படிச் செய்தால் மக்களின் மனம் அதிர்ப்தி யடையும்! நகரில் எல்லா தலைவர்களும் அதிகாரிகளும் கூடி கலந்து மொத்தம் எல்லா வட்டங்களுக்கும் சேர்ந்து 200 அல்லது 300 இடங்களை நிர்ணயித்து போக்கு வரத்துக்கும், மக்களுக்கும் இடைஞ்சலில்லாத முறையில் அனுமதி கொடுக்க வேண்டும்!

மக்களிடம் கருத்துக்களை எண்ணங்களைக் கூற ஆட்சியினர் வசதி செய்ய வேண்டும்! கருத்துக்கு அடக்குமுறை செய்யக் கூடாது. அல்லது ஆட்சியினர் கூறி விட்டும் கூட்டங்கள் போடக் கூடாது, மக்களிடம் கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடாதென்று.

பாக்கிஸ்தானில் நடப்பது போன்று சர்வாதிகார முறையிலாவது நடந்து கொள்ளட்டும்!

ஜனநாயகம் என்று சொல்லுகிறீர்கள், அடுத்து, பேச்சுக்கும் தடை விதிக்கிறீர்கள் இது சரியாகாது!

நான் மாடி மீது நின்று பேசுகிறேன். ஆனால் உங்களைப் பார்த்துப் பேச முடியவில்லை. எதிரில் இருப்பவர்களைப் பார்க்க முடியவில்லை. பக்கத்திலிருப்பவர்களை காண முடியவில்லை ! குனிந்துப் பார்த்தால் தான் சிறிது தெரிகிறது!

எனக்குக் கண் பார்வை மங்காலாகி வருகிறது! உங்களைத் தெரியவில்லை ! பட்டாணி விற்பவன் தான் தெரிகிறான்!

நான் மக்களைப் பார்த்துத் தான் பேசிப் பழக்கப்பட்டவன். அப்போது தான் எனக்கு மக்கள் நிலை தெரியும், மக்கள் முகத்திலிருந்தே அவர்கள் நினைப்பதைத் தெரிந்து அவர்கள் மனப்போக்கு எப்படி யிருக்கிற தென்பதை அறிந்து பேசுவேன்.

ஆகவே அதிகாரிகள் உடனே இந்த நிலையை நீடிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான் மாடியிலிருந்து தான் பேசப் போகிறேன்! என்று கூட்டத்திற்கு வரும் போது தான் ஒரு நண்பர் கூறினார்!

இந்த மாதிரி மாடி மீது நின்று பேசுவது என் வாழ்க்கையில் இரண்டாவது முறையாகும் பத்தாண்டுகட்குமுன்கொத்தவால் சாவடியில், இடம் நெறுக்கடியாக இருந்ததால் போக் தவரத்துக்குத் தடையேற்படு மென்று கருதி ஒரு மாடி மீது நின்று பேசினேன். இரண்டாவதாக இன்று உங்கள் முன் பேசுகிறேன்!

இப்படி இது நீடித்தால் நிலமையே வேறு விதத்தில் போய் நின்று விடுமோ என்று அஞ்சுகிறேன்!

நாங்கள் மாடி மீது நின்று பேச, நீங்கள் எங்களைப் பார்க்க வேண்டு மென்ற ஆவலால் மாடிகளிலும், கூறை மீதிலும், இன்னும் சிலர் மரத்தின் மீதிலும் நின்று பார்க்க, கடைசியில் கீழே நின்று கேட்பதற்கு மக்கள் இல்லாமலேயே போய்விடும் !

வெளி நாடுகளிலிருந்து வருபவர்கள் இந்த நிலையைப் பார்க்க நேரிட்டால் நமது நாட்டைக் கேவலமாக நமது அரசை நமது ஜனநாயக முறையை இழிவாக பேசும் நிலை ஏற்பட்டு விடும்!

நமது தோழர்களும் ஒன்றைக் கவனிக்க வேண்டும், தாங்கள், ஒரு சின்ன குறுகலான முட்டுச் சந்தில் தான் கூட்டம் போட வேண்டு மென்ற பிடிவாதம் கூடாது, கூடுமான வரை அதிகாரிகளுடன் கலந்து அந்த வட்டத்தில் அவர் கூறும் இடத்தில் கூட்டம் போட வேண்டும்!

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது! நாம் இன்னும் பல கூட்டங்கள் போட வேண்டும்! பல தடவைகள் மக்களைச் சந்திக்க வேண்டும்!

தேர்தல் நேரத்தில் பேச்சாளர்களுக்கு ஆபத்தும் நேரிடலாம்! இதை யெல்லாம் கவனிக்க வேண்டும், நீங்கள் "அண்ணா வாழ்க, அண்ணா வாழ்க" என்று ஆர்வத்துடன் முழக்கமிட்டு என்னைச் சுற்றி வரும் போது மாற்றானும் உங்களுடன் கலந்து வந்து பிளேடை வைத்து ஆபத்தை உண்டாக்கலாம்.

இதை யெல்லாம் நமது தோழர்கள் நன்றாக கவனிக்க வேண்டும்!

இந்த ஆபத்து மந்திமார்களுக்கில்லை. அவர்கள் கூட்டம் என்றால் உயர்ந்த அதிகாரிகளும், பணக்காரர்களும், வருவார்கள். போலீசாரும் அதிகாரிகளும் கூடி யிருப்பார்கள். பொது மக்கள் எல்லாம் ரோட்டின் ஓரம் ஒதுக்கித் தள்ளி நிறுத்தி யிருப்பார்கள். கூட்டமும் குறைவாக இருக்கும், நமக்கு அப்படி இல்லையே ஒரு போலீஸ் அதிகாரி கூட நம்முடைய கூட்டங்களில் உள்ள தொல்லைகளை என்னிடம் கூறினார்!

இன்று நாட்டில் மக்கள் படும் தொல்லைகளையும், துயரங்களையும் கண்டு அதைப் போக்க ஆட்சியாளரால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

இன்று நமது மந்திரிகள் அடுத்து வரும் தேர்தலில் நம்மை எப்படி ஒழிப்பது என்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்களே தவிர மக்களிடம் நாம் சந்தித்துப் பேச முடியாதபடி என்ன செய்வது என்ற சிந்தனையில் இருக்கிறார்கள்!

நாம். இனி நமது குறைகளைப் போக்க என்ன செய்ய வேண்டும் நாம் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு இழந்த நாட்டைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

இந்த மாநில அமைச்சர்களுக்குப் பதவியின் மேல் இருக்கும் அக்கரை மக்களிடம் இல்லை! அவர்கள் தங்கள் பதவிக்காக நம் நாட்டையும், மக்களையும் காட்டிக் கொடுத்து வருகிறார்கள்!

நீங்கள் நன்றாக உணர வேண்டும் இன்று நாட்டு மக்கள் நம்முடைய கொள்கைகளை, கருத்துக்

(4ம் பக்கம் பார்க்க)

பார்! பார்! உத்தமர்களைப் பார்! பார்!

"கட்சிவேறு, அரசாங்கம் வேறு—நாங்கள் அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுவதாக இருந்தால் சர்க்கார் செலவில், ஏழைகளின் வரிப் பணத்தில் ஒரு நாளும் கலந்து கொள்ள மாட்டோம்" என்று ஊரெங்கும் பறை சாற்றியும் அமைச்சர்களுடைய யோக்கியதையை தணிக்கை அதிகாரி (ஆடிட்டர் ஜெனரல்) அம்பலப்படுத்திருக்கிறார்!

இந்த கொள்கையை மீறி ஒரு மந்திரி விமானப் பிரயாணம் செய்திருப்பதாக அந்தத் தணிக்கை அதிகாரி கூறுவதை கவனியுங்கள்!

டில்லியிலிருந்து கள்ளிக் கோட்டை செல்ல அந்த மந்திரி மூன்று இந்திய இராணுவ விமானங்களைப்பயன் படுத்திக் கொண்டாராம்! எந்த முறையில் தெரியுமா? அவரது பிரயாணத்தின் மூன்றாவது கட்டத்திற்கு அதாவது, கண்ணனூரிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள கள்ளிக்கோட்டைக்குச் செல்ல ஜோத்பூரிலிருந்து விமானத்தை வரவழைத்துக் கொண்டாரம்!

யுத்த காலத்தில் பயன் படுத்தப்பட்டு சும்மா போடப்பட்டிருந்த விமானம் இறங்கு மிடத்தை அந்த மந்திரியின் விமானம் இறங்குவதற்காக, மத்திய சர்க்காரின் வேண்டுகோள் மாநில சர்க்கார் செப்பனிட்டுத்தந்ததாம்!

எப்படி இருக்கிறது நியாயம், பார்த்தீர்களா?

அதே போல் இந்திய விமானப்படை விமானம் ஒன்றை டில்லியிலிருந்து பெங்களூர் செல்ல 12—1—60 ல் பயன் படுத்திக் கொண்டாராம்! விமானம் அன்றைய தினமே காலியாக திரும்பிற்றும்! மறுபடி 5 தினங்களுக்குப்பிறகு அந்த விமானம் பெங்களூருக்கு திரும்பிவந்து அந்த மந்திரியை அழைத்தும் சென்றதாம்!

அந்த விமானம் பெங்களூர் வர என்ன செலவாகி இருக்கும்? அது காலியா டில்லி திரும்பி, மீண்டும் பெங்களூர் வந்து மந்திரியை அழைத்துச் சென்றது என்றால் எவ்வளவு பணம் பாழாகி இருக்கும்!

இவர்கள் தான் உத்தமர்கள் வேஷம் போட்டு மற்றவர்களைத் திட்டித்திரிகிறார்கள்!

10 ஆண்டுகளில் எந்தக் கட்சியும் அடைய முடியாத வளர்ச்சியை நாம் அடைந்துள்ளோம்!

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கேட்க, அதன் படி நடக்க முன் வருகிறார்கள், மக்கள் நமது கழகத்தை ஆதரிக்கிறார்கள்! என்ற நிலை வந்ததும் நாம் பேசுகின்ற கூட்டங்களுக்கு தடை விதிக்க எண்ணுகின்றனர். நம்முடைய கழகம் ஒன்று தான் அன்றாடம் மக்களை சந்திக்கிறது. அதையும் ஒழிக்கச் சதி செய்தால் மக்கள் தங்கள் உரிமையைப் பெற கிளர்ச்சி தான் செய்வார்கள்.

அன்றாடமுள்ள அரசியல் நிலைமைகளை அதை போக்கும் வழிகளை மக்களிடம் பேசித் தீர வேண்டும். ஆகவே இதை அரசினர் உணர வேண்டும்.

இன்று நம் கூட்டங்களுக்குத் தாய்மார்கள் ஏராளமாக வருகிறார்கள், கிராமங்களில் எல்லாம் கூட்டம் கூடுகிறது. இதைக் கண்டு அரசினர் அஞ்சுகிறார்கள்.

நண்பர் கே. ஆர். ராமசாமி பேசும் போது கூறினார். இந்த மாதிரி மாடியில் கூட்டம் போடுவதால் தாய்மார்கள் வீட்டிலிருந்தே ஒலி பெருக்கி மூலம் பேச்சுக்களைக் கேட்பார்கள் என்று. அது தவறு வீட்டிலிருந்து பேச்சுக்களைச் சரிவர கேட்க முடியாது! காரணம் நாம் பேசும் பேச்சு காற்றினால் தடை பட்டு சொற்கள் சரிவர கேட்காது. நாம், "திராவிட நாடு என்று கூறும் சொல், "தி" மறைந்து "ராவிட நாடு" என்று தான் கேட்கும்.

ஆகவே தாய்மார்களும் நம் கூட்டங்களுக்கு வந்து நமது பேச்சுக்களைக் கேட்க வசதி செய்ய வேண்டும்.

மற்றும் நமது கூட்டங்களில் நீங்கள் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும், கூட்டத்திற்கு வந்தால் கடைசி வரை இருந்து கேட்டுப் போக வேண்டும். நடுவில் எழுந்து போக கூடாது. அப்படிப் போகவேண்டுமென்று நினைத்தால் முன்னால் வந்து உட்காரக் கூடாது. கடைசியிலேயே இருந்து விட வேண்டும் யார் பேசினாலும் கட்டுப்பாடாக ! ஒழுங்கான முறையில் கேட்க வேண்டும்.

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது இடையில் எழுந்து போகும் வழக்கத்தைப் போக்க வேண்டும்.

நமக்கு பொறுப்பு அதிகம் இருக்கிறது. நமது எதிர்காலம் நமக்கு மிக சங்கடம் விளைவிக்கும் நிலைமைக்கு வரும் அதை யெல்லாம் போக்க ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் கடைப் பிடிக்க வேண்டும்!

நமது கழகத் துணைப் பொதுச் செயலாளர் நடராசன் அவர்கள் எனக்கு முன் பேசினார், 15 நிமிடம் நலல முறையில் பேசிக் கொண்டிருந்தார். இடையில் போய் கைத்தறி துண்டைப் போட்டு பேச்சை நிறுத்துகிறீர்கள். இது கூடாது. அப்படிச் செய்தால் பேச்சு கெட்டு விடும். தொடர்பிருக்காது.

நமது நண்பர் கே. ஆர். ராமசாமி மேல் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டிப் பலர் பேசினார்கள்.

அது எனக்கு மிகப் பெருமையைக் கொடுத்தது. நாம் இதைக் கனவில் கூட எணணிப் பார்த்திருக்க முடியாது. நமது ராமசாமி வெற்றி நம்முடைய வெற்றி; நமது கழகத்தில் ராமசாமி நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகிறார். அவர் நமது லட்சியங்களை நல்ல முறையில் மக்களிடம் விளக்கி வருகிறார்.

நமது ராமசாமியை நான் முதல் நாள் மேல் சபையில் உட்கார வைத்தேன்!

நான் அன்று அடைந்த புளகாங்கிதம், நான் அடைந்த மகிழ்ச்சி வேறு என்றும் அடைந்ததில்லை!

எனது வாழ்க்கையில் திருமணமாகி முதல்நாள் என்மனைவியிடம் பேசும் போது எந்தவித மகிழ்ச்சி அடைந்தேனோ அந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

இதைக் கூறும்போது மனைவியிடம் பேசுவதற்கும் இதற்கும் என்ன சம்மந்தமிருக்கிறது. என்று கேட்கலாம்.

மனைவி வாழ்க்கையில் எப்படி நமது உள்ளத்தில் ஒரு உற்ற இடத்தை வகிக்கிறார்களோ அதே போன்று உற்ற நண்பர்களும் உற்ற இடத்தைப் பெறுகிறார்கள்! அந்த உற்ற நண்பர் ஒரு உன்னத இடத்தில் அமர்ந்தால் எப்படி இருக்கும்.

காடு, மேடுகளில் திரிந்து கஷ்டப்பட்டு கொள்கைகளை வளர்த்தோம். இன்று அதன் பலனைப் பெறுகிறோம்.

இன்று நமது ராமசாமி மேல் சபையில் அமருகிறார் என்றால் அது சாதாரணமானதல்ல. மேல் சபை என்பது நாங்களெல்லாம் அமர்ந்துள்ள சட்ட மன்றம் இருக்கிறதே அந்த மன்ற நிறைவேற்றப்படும் சட்டங்களை ஆராய்ந்து அனுமதிக்கும் மன்றம் அது. நாங்கள் இருக்கும் மன்றத்திற்குக் கீழ் சபை என்று பெயர்.

மேல் சபையில் யார் இருக்கிறார்கள் என்பதை அறிவீர்கள்! உலகத்திலேயே சிறந்த அரசியல் மேதை யெனக் கருதும் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அங்கே இருக்கிறார். சட்டத்தையே நல்ல முறையில் அறிந்தவர் என்று கூறப்படும். பால சுப்பிரமணிய ஐயர் அங்கு இருக்கிறார். முன்னாள் உயர் மன்ற நீதிபதி பதஞ்சலி சாஸ்திரி அங்கே இருக்கிறார்.

திரு. ஸ்ரீனிவாச வரதன் அங்கே இருக்கிறார்! அந்த மன்றத்தில் நமது ராமசாமியும் இருக்கிறார்.

நமது லட்சியங்களை நமது கருத்துக்களை அங்கே முழங்கப் போகிறார்!

இது நமக்கு எவ்வளவு பெருமையைத் தருகிறது என்பதைப் பாருங்கள்!

நாம் பிரிந்து வரும் போது நம்மை பழித்தவர்கள் பலர், நாம் பலரிடம் கல்லடிபட்டோம்! சொல்லடி பட்டோம்! பலர் நம்மை சபித்தார்கள் அதை யெல்லாம் நாம் பொருட்படுத்தவில்லை.

நாம் அன்று துண்டை உதறிப் போட்டு நமது தலைவர் பெரியாரை விட்டு வெளியில் வந்தோம். அப்போது நம்மை ஏசினார்கள். நாம் நமது லட்சியத்தை விட்டு விடவில்லை! 10 ஆண்டுகளில் எந்த இயக்கமும் அடைய முடியாத வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். காங்கிரஸ் சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள். அது பத்தாண்டுகளில் எந்த இயக்கமும் அடைய முடியாத வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்! காங்கிரஸ் சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள். அது பத்தாண்டுகளில் நாமடைந்த வளர்ச்சியை அடையவில்லை!

நம்மை அழிக்க பலர் முயற்சித்தார்கள்! நமது லட்சியம் அழிந்தது என்று பலர் ஆள்பரித்தார்கள் அவர்கள் இன்று வெட்கப்படும் நிலை ஏற்பட்டு விட்டது.

திராவிடர் கழகத்திலிருந்து நாம் பிரிந்தோம். நமது லட்சியங்களே அழிந்தது. என்று எண்ணினார்கள். ஆனால் இரண்டு கழகங்களும் வளர்ந்து ஒவ்வொரு முறையில் பணியாற்றி வருகிறது. தமிழ் நாட்டில் இரண்டு கழகம் பவனி வருகிறது. பெரியார் தமிழ்நாடு என்கிறார், நாம் திராவிடநாடு என்கிறோம்.

நமது கழகம் ஆலமரத்தின் விழுது போல் வளர்ந்து வருகிறது இன்று வடநாட்டு சர்க்கார் தென்னகத்தைப்பற்றிக் கவனிக்கிறது என்றால் நமது முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி தான்?

நாம் இந்த பத்தாண்டுகளில் தென்னக மெங்கும் நமது கொள்கைகளை வளர்த்து வந்த தன் பயன் எதற்கும் லாயக்கற்றவர்கள், யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என்று கருதிய நாம் இன்று சென்னை சட்ட மன்றத்தில் பதினைந்து பேர்கள் இருக்கிறோம்.

டில்லி பாராளு மன்றத்தில் இரண்டு பேர்களை அனுப்பியிருக்கிறோம்! சென்னை மாநகராட்சி மன்றத்தில் நாற்பத்தைந்து பேர்கள் இருக்கிறோம்! நகரமன்றத்தின் நிர்வாகத்தை ஏற்றிருக்கிறோம்!

நமது முதல் மேயராக நமது அரசுவை அமர வைத்தோம், நமது காதரை இரண்டாவது மேயராக அமர வைத்தோம். எப்படி முடிந்தது. நமது கடும் உழைப்பும் மக்கள் நமது கொள்கையின் பால், லட்சியத்தின் பால் கொண்ட பற்றே காரணமாகும்!

இன்று நான் திராவிட நாடு இதழுக்குக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தது. அந்த நிலையையும், இன்றைய நிலையையும் நினைத்தேன்.

நான் ஈரோட்டிலிருக்கும் போது எனது தம்பி சம்பத் மிகச் சிறியவன் அவன் பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர எப்பொழுதும் என்னிடம் இருப்பான்!

உங்களுக்குத் தான் தெரியுமே பெரியார் கஞ்சம் பிடித்தவர் என்று!

நானும், சம்பத்தும் தினம் மாலையில் ஓட்டலுக்குச் செல்லுவோம்! இது பெரியாருக்குப் பிடிக்காது! நாங்கள் தினம் போவதைக் கண்டு பிடித்துக் கண்டித்தார். சம்பத்தை அடிக்க வருவார். சம்பத் அதற்குப் பயந்து ஓடி வந்து என்னிடம் ஒளிந்து கொள்வான்!

அந்த சம்பத் இன்று டில்லியில். எல்லோரையும் மிரட்டிக் கொண்டு எல்லா அதிகாரங்களையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் கோவிந்த வல்லப பந்த் முன்னிலையில் நமது கொள்கையை, லட்சியத்தை முழக்கம் செய்கிறான். நாம் இதை எதிர்பார்த்தோமா? நமது சம்பத் அங்கே அடிக்கடி பேச முடியவில்லை! ஏதோ சந்தர்ப்பம் கிடைத்தால் பேச முடிகிறது.

நாம் இப்போது அங்கு இரண்டு பேர்களாக இருக்கிறோம்! அதனால் நமது தோழர்களுக்கு பேசும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நமது சம்பத் ஆற்றோரம் காத்துக் கொண்டிருக்கும் கொக்கு போல் காத்திருந்து சமயம் பார்த்து பேசுகிறான்.

டெல்லியின் ஏகாதிபத்தியம் நம்மை மிகவும் இழி நிலை நடத்தி வருகிறது. இதை விட இன்னும் அதிகமான தொல்லைகளை நாம் அனுபவிக்க வேண்டி வரும் நமது மூலக் கொள்கையான "திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற லட்சியம் வெற்றி பெரும் வாய்ப்பு நமக்கிருக்கிறது!

1962-ம் வருடத் தேர்தலுக்கு காங்கிரசார் இப்போதே வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! நமது அமைச்சர்கள் ஏராளமான பணத்தைச் செலவழிக்கத் திட்டமிட்டு விட்டார்கள்! தமிழ் நாட்டைப்பொறுத்த வரை ஒரு கோடி ரூபாய் செலவழிப்பார்கள்! நாம் பணமில்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களிடம் பிர்லா, பஜாஜ். கள்ளமார்க்கட்காரர், பர்மிட்க்காரர்கள், ராஜாசர்கள்,

(7ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்

ஓவியர், ஓவியம் வரைந்துத் தர கால தாமதமான காரணத்தால் இந்த இதழில் "நேர்தல் புரியாத்ரை" வெளியிட முடியவில்லை. அடுத்த இதழில் கட்டாயம் வெளிவரும்.

—ஆசிரியர்

வீரர் மிகு மராட்டிய மண்டலமே!

நீ, வாழு! நீடூழி வாழு!

தசைப் பிண்டங்களைப் படைத்த தமிழகமே!

நீ, அழிந்து போ! அடியோடு அழிந்து போ! செத்தே மடிந்து போ!

சென்ற ஏப்ரல் திங்கள் 30-ம் தேதி நள்ளிரவு, வீரர் மிகு மராட்டிய மண்டலம், நேரு திருமகனாரின் திருக்கரங்களால் தோற்றுவிக்கப்பட்ட காட்சி கண்கொள்ளா காட்சியாகவே இருந்தது!

மாவீரன் சிவாஜி வாழ்ந்த மராட்டிய மண்டலம் தனி மாநிலமாக உதயமான செய்தி, நம்மையெல்லாம் மகிழ்வித்து பெரும்களிப்புக் கடலில் ஆழ்த்துகிறது!

அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களே! சிவாஜியின் பரம்பரையினரே! மாராட்டிய மண்டலத்துப் பேரையும், அதன் புகழையும் காத்து நிற்கும் வீரப்பரம்பரையினரே! வாழ்க! நீங்கள் நீடூழி வாழ்க!

மராட்டிய மண்டலத்தை ஏற்படுத்த நீங்கள் பட்டபாடு, அடைந்த தொல்லைகள் தான் எத்தனை, எத்தனை! வீரர்களே! யாவும் அறிவோம் நாங்கள் யாவும் அறிவோம்!

போராட்டங்கள் பல நடத்தினீர்கள்! துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கிக் கொண்டீர்கள்! ரத்தத்தை ஆற்று வெள்ளம் போல் சிந்தினீர்கள்! பல உத்தமாகளை தத்தம் செய்து கொடுத்தீர்கள்! "நாங்கள் யார் தெரியுமா? ஊர் மெச்ச, உலகம் மெச்ச, நாடு மெச்ச, நகர மெச்ச நாட்டு மக்களெல்லாம் மெச்ச ஆண்டானே ஒரு மன்னன் —ஆமாம், வீரன் சிவாஜி— அந்த அஞ்சா நெஞ்சனுக்கு சொந்தக்காரர்கள் —சோற்றால் அடித்த பிண்டங்கள அல்ல" என்று புரட்சி கீதம் பாடி புறப்பட்டீர்கள்! சொந்த கட்சி என்றும் பார்க்காமல் எரிமலையாகி வெடித்தீர்கள்! வெற்றியும் பெற்றீர்கள்! நீங்கள் வாழ்க நீடூழி வாழ்க!

"எங்களுக்கு கட்சி பெரிதல்ல பட்டமும் பதவியும் பெரிதல்ல, நாடு, மொழி, இன இவைகள் தான் எங்கள் உயிர்" என்ற பற்றோடு, பாசத்தோடு பெரும் கிளர்ச்சி புரிந்தீர்கள்! உண்மையிலேயே நாங்கள், உங்களுக்குத் தலை வணங்கக் கடமைப்பட்டுள்ளோம்!

உங்களை நேரு பெருமகனார் ஸ்ரீ எதிர்த்தார்! உங்கள் பாசத்தை ஒடுக்க அடக்குமுறைகளை ஏவினார்! அவரையே பணிய வைத்தீர்கள்! அவருடைய திருக் கரங்களைக் கொண்டே உங்கள் நாட்டை தனியாக்கி கொண்டீர்கள்! உங்கள் வீரத்தை எப்படி மெச்சுவது, உங்களுடைய தீரத்தை எப்படி பாராட்டுவது?

உங்களைப் பாராட்டி மகிழ்கின்ற இந்த நேரத்தில் எங்களை கேலிப் புன்னகைப் புரிவீர்கள்! "இளித்தவாயர்களே! வாய் வீச்சு வீரர்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லையா? சொந்த நாட்டிற்கு சொந்தப் பெயரைச் சூட்டிக் கொள்ள கூட திறமையற்றவர்களே" என்று கேட்பீர்கள்!

உங்களுடைய கேள்விகள் எங்கள் இதயத்தை துளைக்கத் தான் செய்கின்றன! வெட்கமும்! துக்கமும் எங்களை வாட்டி வதைக்கத் தான் செய்கின்றன!

எங்களை, நீங்கள் எப்படி கேலி செய்தாலும் நாங்கள் வாய் மூடி மௌனிகளாகத் தான் இருக்க வேண்டும்!

எங்களுடைய பரம்பரை, உங்களுடைய பரம்பரையைப் போல் வீர மறவர் குலத்துப் பரம்பரை தான்! உங்களுக்கு சிவாஜி வீர மூட்டியது போல், எங்களுக்கும் சேரன், செங்குட்டுவன் வீர உணர்ச்சியை மூட்டத் தான் செய்தார்கள்! ஆனால் உங்களுடைய உணர்ச்சி பதவிக்கு பலியாகவில்லை, பேருக்கும், புகழுக்கும் பலியாகவில்லை! ஆனால் எங்களுடைய வீரம், தீரம், எல்லாம், பேருக்கும், புகழுக்கும், பதவிக்கும் பலியாகிவிட்டன!

"பம்பாய் என்ற பெயர் உலகம் புகழ் பெற்றது, அதை மாற்றக் கூடாது, முடியாது" என்று நேரு பண்டிதர் கர்ஜனை செய்த போது—நீங்கள் "ஆமாம், ஆமாம்" என்று பக்கமேளம் கொட்டி பதவியைக் காத்துக் கொள்ளவில்லை! உங்களுடைய முதலமைச்சர் முதற் கொண்டு, நீங்களெல்லோரும "மராட்டியத்திற்கு, மராட்டியம் என்று தான் பெயரிட வேண்டும்' என்று கூறினீர்கள்!

இங்கே, எங்கள் முதலமைச்சர் முதற் கொண்டு எல்லோரும் "சென்னை உலகம் புகழ் பெற்றது, அதை மாற்ற முடியாது, கூடாது" என்று கர்ஜித்தார்கள்—இல்லை, இல்லை பதவி பாதுகாப்புப் போராட்டம் நடத்தினார்கள்!

"உங்களுக்கு நாடு பெரிதல்ல, சோறுதான் பெரிது" என்று கேட்பீர்கள்! ஆமாம், உண்மையிலேயே அந்த நிலைதான் இன்று!

"சோற்றை அடைத்து உடலை ஊத வைத்து வெறும் மாமிச மலையாய் வாழ்வதை விட செத்து மடிவது மேலல்லவா" என்று கேட்பீர்கள்! நீங்கள் சொல்வது தான் உத்தமம்! நாட்டையும், நாட்டின் புகழையும் குலைத்து வாழ்வதைவிட செத்து மடிவதே மேல் தான்! "சாகக் கூட உங்களுக்கு வீரம் உண்டா" என்று கேட்டால் அதுவும் சந்தேகம் தான்

வீரர்களே! தமிழர்களே! சேரன், செங்குட்டுவன் பரம்பரையில் வந்தவர்களே! உங்களை மராட்டிய மண்டலம் கேலி செய்வதைப் பாருங்கள்! மராட்டிய மண்டலம் உதயமாகி விட்டது! நேருவே அந்த மாராட்டிய மண்டலத்தை உதயமாக்கி இருக்கிறார்! எங்கே தமிழகம்? ஏன் தமிழகம் உருவாகவில்லை!

உலகம் புகழ் பெற்ற பம்பாய் மாநிலம் மராட்டிய மாநிலமாகி விட்டது! சென்னை மட்டும் ஏன் தமிழகமாகவில்லை! உங்களுக்கு உங்கள் நாட்டின் மீது பற்றில்லையா? பாசமில்லையா? நேசமில்லையா? என்ன காரணம்?

பம்பாய் மாநிலத்து முதலமைச்சரே மராட்டிய மாநிலத்தை உருவாக்க பெரும் பாடுபட்டார்! அவரும் காங்கிரஸ்காரர்தான்! இங்குள்ள முதலமைச்சரும் காங்கிரஸ்காரர் தான்! அவருக்குள்ள பாசம், நேசம் இவருக்கு இல்லாமல் போன காரணம் என்ன?

தமிழகத்து வீரம் செத்து மடிந்து விட்டதா? தமிழகத்தின் தன்மான உணர்ச்சி ஒழிந்து விட்டதா? தமிழகத்தில் வாழ்பவர்கள் தமிழ் உணர்ச்சிபற்ற மரக்கட்டைகளா? ஆமாம், என்றால் "மாமிச பிண்டங்களைப் படைத்த தமிழகமே! நீ அழிந்து போ! அடியோடு அழிந்து போ!" என்று மனம் நொந்து, நொந்து சாபமிடத்தான் வேண்டியிருக்கிறது!

வீரர் மிகு மாரட்டிய மண்டலமே! நீ வாழு, நீடூழி வாழு! தமிழகமே! நீ தன்மான உணர்ச்சி கொண்டு புதிய தமிழகம் தோற்றுவிக்கவா! இல்லாவிட்டால் நீ அழிந்தே போய்விடு!

"பியெஸ்யி"

10 ஆண்டு நிர்வாகத்தில் காங்கிரஸ் 4,800 குற்றங்களைச் செய்திருக்கிறது!

குற்றம் செய்தவர்களுக்கு அரசாங்கம் என்ன தண்டனை கொடுத்தது!

சென்னை சிந்தாதிரிப் பேட்டை அறிவு வளர்ச்சி மன்றத்தின் ஆண்டு விழா 30-4-60ம் தேதி மாலை கலவச் செட்டித் தெருவில் தோழர் ஆடலழகன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைப் பற்றியும், அதை மாற்றார் தூற்றி வருவது பற்றியும், இந்தி ஆட்சி மொழியாக வருவதுபற்றியும் பேசினார்.

பின்னர் நகரமன்ற உறுப்பினர்களான தோழர்கள் மணிவண்ணன், ஏ, கபாலமூர்த்தி ஆகியோர்கள் நகரமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்த பணிகளை எடுத்துக் கூறினார்கள். பின் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், சட்டமன்ற உருப்பினருமான பேராசிரியர் க, அன்பழகன் M.A. அவர்கள் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே, அருமை அண்ணா அவர்களே, தாய்மார்களே, நண்பர்களே!

இன்று சிந்தாதிரிப் பேட்டை அறிவு வளர்ச்சி மன்றத்தின் ஆண்டு விழாவில் நமது அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் பேசும் கூட்டத்தில் எனக்கும் பேசும்வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

சென்ற ஆண்டு சிந்தாதிரிப் பேட்டையில் நானும் அண்ணா அவர்களும் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில் நான் பேசிய பின் நமது அண்ணா அவர்கள் நான் எல்லாம் கூறியிருக்கிறேன் என்று கூறி குறைத்துப் பேசினார் அதை வைத்து "இந்த எம், எல், ஏ. பேசியதால் தான் அண்ணா பேச்சைக்கேட்க முடியவில்லை" என்று பலர் வருத்தமடைந்தார்கள் நான் அந்த நிலையை இன்றுஉண்டாக்காமல், என் பேச்சைக் குறைத்துக் கொண்டு அண்ணா அவர்கள் பேசவாய்ப்பளிக்கிறேன்,

இந்தப் பேட்டையிலுள்ள அறிவு வளர்ச்சி மன்றம் இங்கு நல்ல பணிகளைச் செய்து வருகிறது. அவர்களைப் பாராட்டி, அவர்களை பொது மக்கள் ஊக்குவிக்க வேண்டும்.

இந்த சிந்தாதரிப்பேட்டையில் நமது இயக்கத் தோழர்கள் மூன்று பேர்கள் நகரமன்ற உறுப்பினர்களாத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் தோழர்கள் அ. பொ. அரசு, மணிவண்ணன், கபாலி இந்த மூவரும் இந்தப் பகுதிக்கு நல்ல பணியாற்றி வருகிறார்கள்.

இந்தக் கூட்டம் நடைபெறும் இந்தப் பகுதியில் தோழர்கள் கபாலியும், மணிவண்ணனும் மக்களின் குறைகளைப் போக்க நன்கு பணியாற்றி வருகிறார்கள்.

சென்னை அரசினருக்கு

அன்பழகன் சாட்டை

நகர மன்றத்தில் நமது கழகத் தோழர்கள் பொறுப் பேற்று ஓராண்டுகள் ஆகிறது. பொது மக்கள் அவர்கள் பணியைப் பாராட்டுகிறார்கள். நமது தோழர்கள் 45 பேர்களும். மக்களுககு வாக்களித்தபடி நல்ல பணி செய்து வருகிறார்கள். ஆனால், அமைச்சர்களும். மாற்றுக் கட்சியினரும் குறை கூறி வருகிறார்கள்.

நகரத்தில் சுகாதாரம் கெட்டு விட்டதென்றும், நகரமே நாறுகிறதென்றும் குறைகூறி வருகிறார்கள்.

அரசியல் வேறு பாட்டை வைத்து இப்படிக் குறைகூறி வருகிறார்கள்.

நமது மாநில கல்வி அமைச்சரும் நிதி அமைச்சருமான திரு. சி. சுப்பிரமணியம், நகரம் நாறுகிறது. நிர்வாகம் சரியில்லை என்று சொல்லுகிறார்!

இதே நிதி அமைச்சர் சுப்பிரமணியம் 2 மாதத்திற்கு முன் சட்ட மன்றத்தில் பேசும் போது "நகரத்தில் சுகாதாரம் கெட்டிருக்கிறது. நாற்றமிருந்து வருகிறது. இது இப்போது ஏற்பட்டதல்ல பல ஆண்டுகளாக இருக்கும் குறைகளால் தான் இப்படி இருக்கிறது" என்று கூறினார்,

ஆனால் அதே நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வெளியிடங்களில் வந்து பேசுகிறார் திராவிட முன்னேற்றக் கழகம் நகர சபைக்கு வந்த பின் சுகாதாரம் கெட்டு விட்டது. நகரில் நாற்றமெடுக்க ஆரம்பித்திருக்கிறது என்று கூறுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வாகப் பொறுப்பை ஏற்று பன்னிரெண்டு மாதங்கள் தான் ஆகிறது. இந்த பன்னிரெண்டு மாதத்தில் தான் நாற்றமிருக்கிறது, அதற்கு முன் சந்தனசாசனை அடித்ததா?

நகரசபை செய்யும் காரியங்களுக்கு அரசினர் மான்யமும், கடனும கொடுக்க வேண்டும்!

நகர மன்றம் செய்யும் பல திட்டங்களுக்கு அரசாங்கம் உதவ வேண்டும் அப்படி அரசாங்கம் நகரமன்றம் கேட்டும் இதுவரை ஒன்றும் செய்யவே இல்லை!

கட்சி மாறு பாட்டை வைத்து. அரசியல் கண்ணோட்டத்துடன் முன்னேற்றக் கழக வேலைகளுக்கு அரசாங்கம் தடங்கல் செய்து வருகிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஓராண்டு காலத்தில் பல திட்டங்கள் தீட்டி அரசினருக்கு அனுப்பி யிருக்கிறது.

குடி தண்ணீர் வசதிக்காக ஆந்திராவிலிருந்து ஒரு ஆற்றின் மூலம் தண்ணீர் கொண்டு வர ஒரு திட்டமும், அதற்குச் செலவாகும் பணத்தைப் பற்றியும், காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர ஒரு திட்டமும், அதற்குச் செலவாகும் பணத்தைப் பற்றியும் அரசாங்கத்திற்கு நகர மன்றம் அனுப்பி யிருக்கிறது!

சாக்கடைத் திட்டத்திற்கு ஒரு கோடி திட்டமும். சுகாதார வசதிக்காக இரண்டு கோடி திட்டமும் இன்னும் பல திட்டங்களும் வகுத்து சாக்காருக்கு நகர மன்றம் அனுப்பியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் இதுவரை அதற்கான பதிலோ, அனுமதியோ கொடுக்கவில்லை. அதற்கு மாறாக நகர சபையின் மீது குறை கூறி வருகிறது.

நகர மன்றம் நகரத்திற்கு செய்ய வேண்டிய பல காரியங்களை அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு, அதன் அனுமதியைப் பெற்று ஆற்ற வேண்டும். ஆனால் நமது அரசினர் மாற்றுக் கடசியினர் நிர்வாகத்திலிருக்கிறார்கள் என்ற காரணத்தை மனதில் வைத்து. மாற்றுக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க, அந்தக் கட்சியின் வளர்ச்சியை அழிக்க திட்டமிட்டுவருகிறார்கள்,

ஒரு குடும்பம் அந்தக் குடும்பத்தில் கணவனும், மனைவியும் வாழ்கிறார்கள். அவன் கஞ்சன். குடும்பம் நடத்த, சமையல் செய்வதற்கு தேவைப் படும்படியான சாமான்கள் அவன் வாங்கிக் கொடுப்பதில்லை. சாமான்களை சரிவர வாங்கிக் கொடுக்காது சாப்பாட்டு நேரத்தில் சாப்பிட வந்து சாப்பாட்டைக் குறைகூறினால் அவனைக் கையாலாகாதவன் என்று தான் மனைவி நினைப்பாள்!

அதே போல் நமது சென்னை அரசினரும் நகர மன்றத்திற்கு வேண்டியதை — தேவைப்படுவதை, நியாயமாகச் செய்ய வேண்டியதைச் செய்யாது குறை கூறிப் பேசி வந்தால் இதற்கு என்ன நினைப்பது!

நகர மன்றத்தில் நாம் நிர்வாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஓராண்டில் என்னென்ன செய்ய முடியுமோ அதைச் செய்திருக்கிறோம்! அதை விட்டு, எதிர்க் கட்சி நிர்வாகத்தில் இருக்கிறதென்ற எரிச்சலால் எது வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசினால்—தூற்றினால் தூற்றட்டும். பொது மக்கள் கூடவா நாம் செய்து வரும் காரியங்களை உணராது போய் விடுவார்கள்!

சென்னை நகர மன்றத்தை காங்கிரஸ் நிர்வாகம் செய்திருந்த காலத்தில் 10 ஆண்டுகளில் 4,800 தவறுகள் செய்திருக்கிறது. அதாவது வருடமொன்றிற்கு 600 தவறுகள் வீதம் புரிந்தவர்களுக்கு சென்னை அரசாங்கம்—சென்னை அமைச்சர்கள் என்ன தண்டனை கொடுத்தார்கள்!

அதைப்பற்றி அரசினர் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்!

இந்தத் தவறுகளைக் கண்டு பிடித்துக் கூறியது தோழர் அரசு அவர்களோ, தோழர் காதர் அவர்களோ அல்ல!

சென்னை சர்க்காரின் ஆடிட் டிபார்ட் மெண்ட் கண்டு பிடித்து வரவு செலவு திட்டத்தின் போது இதைக் கூறியிருக்கிறது.

நான் இதைக் குறித்து சட்ட மன்றத்தில் பேசினேன். அதை விரிவாக விளக்கமாகக் கூறினேன்!

நமது நிதி அமைச்சருக்குக் கோபம் வந்து சட்ட மன்றத் தலைவரிடம் சென்று "இவரை அதிக நேரம் பேசி விடக் கூடாது" என்று சொல்லி இருக்கிறார்,

ஏன் அவருக்கு கோபம் வருகிறது! தங்களது சொந்தக் கட்சி செய்த தவறுகளை ஏன் அரசினர் மூடி வைக்கின்றனர்!

காங்கிரசார் இருந்து வந்த பல கமிட்டிகளில் நடந்த தவறுகளின் விளைவால் ஏற்பட்ட நஷ்டத்தை "சர்சார்ஜ்" செய்ய ஆடிட்டர் டிபார்ட் மெண்ட் உத்திர விட்டிருக்கிறதே. சர்க்கார் என்ன செய்தார்கள்!

நீதியும் நேர்மையுமுள்ள அரசினராக இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

கழகத்தினர் நிர்வாகத்தில் இருப்பதால் சாக்கடை நாறுகிறது ஆனல் இவர்கள் கட்சியினர் செய்த ஊழல் நாற்றம் "சந்தன வாடையா" இதை நல்லவர்களும், நேர்மையுடையவர்களும், ஒப்புக் கொள்வார்களா?

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் நகர மன்றத்தில் இருந்த பத்தாண்டில் தொடர்ந்து தவறுகள் செய்து வந்திருக்கிறார்கள் அமைச்சர்கள் மூடி வைத்தே வந்திருக்கிறார்கள் இதை பொது மக்கள் நன்கு உணர வேண்டும்

பொது மக்களின் நன்மைக்காக இருபபதாகக் கூறும் அமைச்சர்களுக்கு கட்சி வெறுப்பு — துவேஷம் கூடாது.

(7-ம் பக்கம் பார்க்க)

டில்லி ஆட்சிபீடத்தை கையில் வைத்திருக்கும் பந்தையே சம்பத் எந்த பலத்தை கொண்டு எதிர்க்கிறார் ?

(அண்ணா பேச்சு)

(4-ம பக்கத் தொடர்ச்சி)

வடபாதி மங்கலம், மில் முதலாளிகள் போன்றவர்கள் இருக்கிறார்கள். நம்மிடம் நீங்கள் தான் இருக்கிறீர்கள் நீங்கள் தான் உதவ வேண்டும்!

நீங்கள் கேட்கலாம் "அண்ணா நீங்கள் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்தோமே, அதற்கென்ன கணக்கு" என்று, சொல்லுகிறேன்.

இங்கிருந்து ராயபுரம் போங்கள், அங்கே நமது அறிவகத்திற்குப் போங்கள்! அந்தக் கட்டிடத்தைப் பாருங்கள். அது உங்களுக்குச் சொந்தம். உங்கள் காசால், நீங்கள் கொடுத்த பணத்தால் நமக்குக் கிடைத்தது! உடனே பூரிப்படையுங்கள், இது நமது சொந்தக் கட்டிடம் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுங்கள். பின்னும் உள்ளே போய் அங்கிருக்கும் அச்சகத்தைப் பாருங்கள் பெற்ற குழந்தையைத் தடவிக் கொடுப்பது போல் அங்குள்ள இயந்திரத்தைத் தடவிக் கொடுங்கள். அதுவும் உங்களது சொந்தப் பொருள் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

பின் நுங்கம்பாக்கத்துக்குப் போங்கள் அங்கிருக்கும் மைதானத்திற்குப் போய் நாலு முறை உலாத்துங்கள் அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் வந்து ஏன் இங்கு உலாத்துகிறாய் என்று கேட்டால் "இது எங்கள் மைதானம் எங்கள் சொந்த இடம்" என்று பெருமையுடன் கூறுங்கள் "என்ன உனக்குப் பைத்தியமா" என்று கேட்டால் இல்லை எங்கள் பணத்தால்—நாங்கள் எல்லாம் கொடுத்த சிறு காசுகளால் எங்கள் கழகத்துக்கு வாங்கிய இடம்" என்று சொல்லுங்கள்.

கும்பகோணத்தில் 25,000 ரூபாயுக்குப் பெரிய கட்டிடம் வாங்கி விரைவில் திறக்கப் போகிறோம்! ஆகவே நீங்கள் நான் அடிக்கடி கூறிவருவது போல் 1962-ம் வருடத் தேர்தலுக்கு உண்டியல் வைத்து 1 பைசா போட்டு தேர்தல் நிதி சேருங்கள்! அப்படிச் சேர்த்தால் நான் கொஞ்சம் தெம்பாக இருப்பேன்! அமைச்சர்களிடம் கொஞ்சம் கெம்பீரத்துடன் பேசுவேன். நான் உங்களைத் தவிர வேறு யாரிடம் பணம் கேட்க முடியும்.

நீங்கள் பணம் படைத்தவர்கள் இல்லை என்பதை நானறிவேன்! நீங்கள் உழைத்து வரும் ஊதியத்தை வைத்து உங்கள் வாழ்க்கையை நடத்துகிறவர்கள். இருந்தாலும் நான் பணக்காரர்களிடம் போய் பணம் கேட்க முடியுமா? நாம் என்றும் பணக்காரர்களைக் கண்டித்து வருபவர்களாயிற்றே எப்படி அவர்கள் நமக்குப் பணம் தருவார்கள்!

ராஜாசர் முத்தையாவிடம் பணம் கேட்டால் என்ன சொல்வார் நீங்கள். தான் மேடைதோறும் என்னைப் பற்றி தூற்றுகிறீர்களே உங்களுக்குப் பணம் வேறு தர வேண்டுமா என்று கேட்க மாட்டாரா?

வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாரிடம் கேட்க முடியுமா? அவர் கேட்க மாட்டாரா? எங்கள் நிலத்தைப் பறிக்க வேண்டும் என்று கூறுகிறீர்களே. உங்களுக்கு நான் எப்படிப் பணம் தருவது என்று பின், மில் சொந்தக்காரர்கள் தருவார்களா? பஸ் முதலாளிகள் தருவார்களா? ஆகவே நான் உங்களைத் தான் பணம் கேட்பேன்! உங்கள் வாழ்க்கைச் செலவிற்குப் போக, மீதியில் நீங்கள் செய்யும் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, சினிமா, டிராமாக்களுக்கு செல்வதைக் குறைத்து தினம் ஒரு காசு உண்டியலில் போடுங்கள் இந்த மாதிரி மாநில மெங்குமுள்ள தோழர்கள் உண்டியலில் பணம் சேர்த்து தேர்தல் நிதிக்குப் பணம் கொடுத்தால் காங்கிரசை ஒரு கை பார்க்கிறேன்! இன்று நமது இலட்சியங்கள் வெற்றி பெறும் வாய்ப்புக்கள் பல ஏற்பட்டு வருகிறது! எதிர்பாராத ஆதரவுகள் நமக்குக் கிடைத்து வருகிறது!

வரும் பொதுத் தேர்தலில் நமது கழகம் பெறும்வெற்றியை வைத்து நாம் இழந்த நாட்டை விடுதலையடையச் செய்ய முடியும் நாம் கேட்கும் திராவிடநாடு யார் எதிர்த்தாலும் நமக்குக் கிடைக்கும்.

நாம் அடுத்த தேர்தலில் தோற்றால், அந்தத் தோல்வியின் நிலை இருபத்தைந்தாண்டுகளுக்கு தலை தூக்கச் செய்யாது. ஆகவே நீங்கள் இன்றிலிருந்தே வரும் தேர்தலுக்கான பணத்தைச் சேருங்கள்.

நான் பேசும் கூட்டங்களில் உண்டியலை காட்டுங்கள். அப்படி நீங்கள் காட்டினால் மாற்றார்கள்—நம்மை மேடையில் தாக்குபவர்கள் நம்மைக் கண்டு பயப்படுவார்கள்.

ஆகவே நீங்களெல்லாம் இதை உணர்ந்து உண்டியல் வைப்பதுடன் உங்கள் தோழர்களையும் உண்டியல்வைக்கச்செய்யுங்கள்.

நம் கொள்கைகளைத் தெரிந்தவர்கள் உண்டியல் வைக்கட்டும், கொள்கையைப் புரியாதவர்கள்—புரிந்துக் கொள்ள முடியாதவர்கள் நாலைந்து கூட்டங்களுக்கு அழைத்து வாருங்கள் அவர்களை நம் கொள்கைகளை இலட்சியங்களை அறிந்து கொள்ளும்படி செய்து பின் உண்டியலை வைக்கச் செய்யுங்கள்,

இன்று நமது கழகத்தை இழித்துத் தூற்றி வருபவர்கள் இனி இவர்களைத் தூற்றக் கூடாது. நாம் எப்படி இழித்துப் பேசினாலும் உண்டியலில் பணம் போட்டுத் தருகிறார்கள் என்று நினைத்துத் தாக்குவதை நிறுத்திக் கொள்வார்கள்.

நமது கழகம் மந்திரி பதவிக்காக—ஆட்சி செய்வதற்காகப் பாடுபடவில்லை. இழந்த அரசைப் பெறவே பாடுபட்டு வருகிறது. மந்திரி மாணிக்கவேலர் ராமசாமி படையாட்சி போல் மாறுமலேயே பதவியைப் பெறலாம்.

தென்னகத்தின் உரிமைகள் யாவும் வடவர்கள் கையில் இருந்து வருகிறது. தென்னகத்திற்கென எந்த திட்டமும் போட நமது அமைச்சர்களுக்கு உரிமை இல்லை! நமது அமைச்சர்கள் பதவி நிலைத்தால் போதுமென எண்ணுகிறார்கள். நாம் அப்படியல்ல. நம் நாட்டிற்கு வேண்டியதை நம் நாட்டில நம்மவர்களே செய்ய வேண்டும், பிறர் தயவை நாடக் கூடாது.

வட நாட்டார் நமக்கு எஜமானர்களாக இருக்கக் கூடாது. அதை மாற்றவே நான் உண்டியலில் காசு சேர்க்கச் சொல்கிறேன்.

காசு சேர்த்தால் நாடு கிடைத்து விடுமா என்று நினைக்கலாம் என்று தேர்தலில் நாம் பெரும்பான்மையாக வெற்றி பெற்றால் நிச்சயமாக அதைக் காட்டி நம் நாட்டை விடுதலையடையச் செய்யலாம்.

ஆகவே நீங்கள் உடனே உண்டியலை வைத்து ஒவ்வொரு கூட்டத்திலும் குலுக்கிக் காட்டுங்கள்! இதைச் செய்தால் நிச்சயம் நமது லட்சியம் நிறைவேறும் என்று கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்

(அன்பழகன் பேச்சு)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நான் பொது மக்களைப் பணிவோடு வேண்டுகிறேன். நீங்கள் தான் இந்த ஓராண்டு நிர்வாகத்தையும், அதன் முன்பிருந்த பத்தாண்டு நிர்வாகத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

நமது நகரில் கொசுத் தொல்லை மிகவும் மோசமாக இருந்து வந்தது. கொசு கடித்தால் உடம்பெல்லாம் வீங்கி, மெல்லியவனும், அதாவது என்னைப் போல் இருப்பவனும் தடிப்பாகக் காணப்பட்டான். ஆனால் நமது தோழர்கள் வந்த பின்—அதுவும் கொசுத் தொல்லையை நீக்க பெரும் முயற்சி எடுத்து அதையும் நீக்கிவிட்டார்கள். இன்னும் நகரில் பல திட்டங்களை வகுத்து நகரமக்களின் நன்மைக்கான பணியைச் செய்ய நமது தோழர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உங்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் நல்லமுறையில் பணி செய்வார்கள்.

நகர மன்றத்தில் நாம் செய்யும் பணியைப் போல சட்டமன்றத்திலும் செய்ய வேண்டுமானால் நீங்கள் முன்னேற்றக் கழகத்திற்கு முழு ஆதரவு தர வேண்டும்

நம்முடைய கழகம் இன்று நமது அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அரும் பணியாற்றி வருகிறது. நமது கழகம் இன்று தென்னகத்தில் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது.

சட்டமன்றத்தில் 15 பேர்களும், பாராளு மன்றத்தில் 2 பேர்களும். நகரமன்றத்தில் 45 பேர்களும் இருக்கிறோம்.

நாம் குறைவான எண்ணிக்கையுடனிருந்தாலும் நமது கடமையைச் செய்து வருகிறோம்.

நடிகர்கள் யோக்கியர்களல்ல—அவர்கள் கூத்தாடிகள் என்று காங்கிரசார் கூறி வந்தார்கள்.

ஆனால் நாம் அந்தக் "கூத்தாடிகளில்" ஒருவரான நடிப்பிசைப் புலவர் ராமசாமியைத்தான் மேல் சபையில் அமர வைத்திருக்கிறோம்,

எப்படிப்பட்டவர்கள் இருக்கும் சபையில், அகில உலகமே மதிக்கும் அரசியல் மேதை டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், உயர் நீதிமன்ற நீதிபதி பதஞ்சலி சாஸ்திரி, டாக்டர் ஏ. சிதம்பரநாத செட்டியார் போன்ற பல பெரியவர்கள் இருக்கும் சபையில் நமது ராமசாமி இருக்கிறார். 10–15 ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருக்கும் இலட்சுமணசாமி முதலியார் எங்கே? நண்பர் ராமசாமி எங்கே?

நமது ராமசாமியின் கொள்கை முழக்கம் மேல் சபையில் முழங்கப் போகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் நமது ராமசாமி நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகிறார்.

அவர் உழைப்பிற்கு இந்தப் பெருமையை அளித்திருக்கிறோம்.

நம்மை மாற்றார் திட்டுகிறார்கள் என்று வருத்தப்படுகிறார்கள். அவர்கள் திட்டத் திட்ட நாம் வளர்கிறோம்.

நமது அறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கண்ணியம், கடமை கட்டுப்பாடு என்ற போதனையைப் போதித்திருக்கிறார். நாம் அதைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

மேமாதம் 15ம் தேதி மறைந்த மாவீரன் தோழர் பி. பாலசுப்பிரமணியம் குடும்பத்திற்கு நிதியளிப்பதற்காக நமது அண்ணா அவர்கள் தீட்டிய "சந்திரமோகன்" நாடகம் நடைபெறப் போகிறது. அதில் எம். எல். ஏ. வான நமது அண்ணாவும். எம். எல். சி. யான ராமசாமியும் நடிக்கப் போகிறார்கள்.

உயர்ந்த கட்டணம் போடப் பட்டிருக்கிறது. வசதி இருப்பவர்கள் உதவ வேண்டுகிறேன்.

நமது கழகத்திற்கும், நமது கொள்கைக்கும், இலட்சியத்திற்கும் ஆதரவு தரவேண்டுகிறேன்,

எனக்கு இந்த வாய்ப்பளித்த இந்த மன்றத்தாருக்கு நன்றித் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்

தேர்தலுக்குள் நம்மை அழித்திட காங்கிரசார் சதி செய்கிருர்கள் !

ராணுவத்தையும்—போலீசையும் வைத்து நம்மை அடக்குவார்களாம்— எது வரினும் இன்பத்தோடு ஏற்போம் !

சென்னையில் இலட்சிய நடிகர் எஸ். எஸ்.ஆர். வீரமுழக்கம்!

சென்னை 59-வட்டம் ஆல் தோட்டத்தில் கலை வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவும் நகர மன்ற உறுப்பினர் திரு. டி. என், கிருஷ்ணன் பாராட்டுக் கூட்டமும் 24-4-60ம் தேதி மாலை 6-மணிக்கு நடைபெற்றது. அது சமயம் இலட்சிய நடிகர் எஸ், எஸ். இராஜேந்திரன் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! எனது அருமை அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களே! நண்பர்களே!



இன்று இந்த வட்டத்தில் நடைபெறும் கலை வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவிலும், தம்பி கிருஷ்ணனின் பாராட்டுக் கூட்டத்திலும் கலந்து பேசும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெருதம் மகிழ்வு கொள்கிறேன். இந்த வடடத்து மக்களுக்கு எனது நன்றியும் வணக்கமும் செலுத்திக் கொள்கிறேன்!

இந்த வட்டத்தில் நமது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருவாரியான ஆதரவு இருந்து வருகிறது!

தம்பி கிருஷ்ணனுக்கு இந்த வட்டத்தில் குறிப்பாகப் பல பகுதியில் அதிக வாக்குகள் கிடைத்திருக்கிறது.

நமது கிருஷ்ணன் இன்று இந்த வட்டதிலுள்ள மக்களோடு ஒன்ருகி நல்லமுறையில் பணியாற்றி வருகிருர். அதனலேயே இன்று இந்த வட்டத்து மக்கள் பாராட்டுகிருர்கள்.

தினம் தம்பி கிருஷ்ணனை ஒரு முறையாவது சந்திப்பேன் சந்தித்து அளவளாவிக் கொண்டிருப்பேன், அட்பொழுது நான் கேட்பேன், 'உன்னுடைய வட்டத்திற்கு இன்று என்ன காரியம் செய்தாய்? எங்கெங்கு போனுய், என்னென்ன குறைகளைக் கண்டாய், அதைப் போக்க என்னென்ன வழிகளைச் செய்தாய்'' என்று தினம், தினம் கேட்பேன், இது என்னுடைய வழக்கமாகி விட்டது!

தம்பி கிருஷ்ணனும் தான் செய்த டணிகளின் விபரத்தை விபரமாகக கூறுவான். அதைக் கேட்டு மகிழ்வேன்.

தப்பி கிருஷ்ணன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீங்காப் பற்றுடையவன், கொள்கைகளை செய்கையில் நிறைவேற்ற வேண்டுமென்ற அளவற்ற ஆசையுடையவன் பொது பணி செய்ய வேண்டும். மக்களுக்குப் பாடுபட வேண்டுமென்று துடிதுடியாய் துடிப்பவன்.

அப்படிப்பட்ட தம்பி கிருஷ்ணனுக்கு உங்கள் வாக்குகளைக் கொடுத்து ஆதரித்தீர்கள்!

எனக்கு முன் பேசிய நமது மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசும் போது, நமது திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்காக கலைஞர்கள் மிக அரும்பாடுபடுகிருர்கள் என்று கூறினர்.

நம்முடைய கழகத்தில் கலைஞர்கள், மாணவர்கள், தாய்மார்கள் ஏராளமாகச் சேர்ந்து பணியாற்றி வருகிருர்கள்!

இளைஞர்கள் பட்டாளம் ஏராளமாக நம் கழகத்தில் சேர்ந்திருக்கிருர்கள். கொள்கை உரம் பெற்ற நடிகர்கள், கலைஞர்கள் ஏராளமானவர்கள் இன்று முன்னேற்றக் கழகத்திலிருக்கிருர்கள்.

இதைப் பார்த்து நமது மாநில அமைச்சர்கள் சில கலைஞர்களின் பின்னல் சுற்றுகிருர்கள் அவர்கள் காலடியில் படுத்துக் கிடக்கிருர்கள்.

ஆனல் அந்தக் கலைஞர்களோ அவர்கள் தங்களைக் கட்சிக்காரர்கள் என்று கூறிக் கொள்வதில்லை ஆனல், நானே, தென்னகத்தில் ஒரே ஒரு சிறந்த நடிகரான புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனே மற்ற கலைஞர்களோ அது எந்தக் கூட்டமானலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் என்று சொல்லிக் கொண்டுதான் பேசுவோம்! அதில் பெருமையும் கொள்வோம்!

நான் எனது சின்னஞ்சிறு வயதில் ஔவை திரு. டி. கே. ஷண்முகம் அவர்களின் பால சண்முகானந்தா சபாவில் பால ராஜபார்ட் வேஷம் போட்டு நடித்துக் கொண்டிருந்தேன், அப்போது தம்பி கிருஷ்ணன் மிகச் சின்னவன் அந்தக் கம்பெனியில் வந்து சேர்ந்தான் அவர் எங்கே மிகுந்த சுறு சுறுப்பாகவும் ஆர்வமாகவும் இருப்பான். யார் இடத்திலும் அன்பாக இருப்பான். அப்போதே கிருஷ்ணன் மீது எனக்கு அன்பு பிறந்தது. கிருஷ்ணனின் ஒழுக்கமும், அடக்கமும் என்னைக் கவர்ந்தது!

பின் கிருஷ்ணன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்கத்தினராகி அதன் கொள்கைகளைப் பரப்பி வரும் ஆர்வத்தையும் கண்டேன். மக்களுக்கு பாடுபட வேண்டும், பொது சேவை செய்ய வேண்டும் என்று அவன் கொண்டிருந்த எண்ணத்தைக் கண்டேன், எனக்கு அவன் மீது நீங்காத பற்று ஏற்பட்டது! அவனை எனது குடும்பத்தில் ஒருவனகச் சேர்த்துக் கொண்டேன்!

கிருஷ்ணன் சின்ன வயதிலேயே துடி துடிப்பு கொண்டவன், அதைக் கண்டு தான் அவரின் ''பொது சேவை செய்'' எனக் கூறி நகர மன்ற உறுப்பினராக நிற்க அனுமதித்தேன். உங்கள் ஆதரவால வெற்றி பெற்ருன் உங்களுக்கு சேவை செய்கிருன்!

இவன் தேர்தலில் நிற்க முயன்ற போது எள்ளி நகையாடினுர்கள் ''இந்த சின்னப் பையன், ஆள் பார்த்தால் குள்ளமாக இருக்கிருன், இவனை நிறுத்தியிருக்கிருர்களே'' என்று கேலி பேசினுர்கள். ஆனல் அவர்களெல்லாம் வெட்கப்படும் படியான முறையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றி யடைந்தான்.

இன்று கிருஷ்ணனை மற்றவர்கள் பாராட்டுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்து வருகிறேன்.

நான் கிருஷ்ணனை எப்படிப் பாராட்டுவேன். என் குடும்பத்தைச் சார்ந்தவனை நானே பாராட்டுவது சரியாகுமா?

தம்பி கிருஷ்ணன் பேசும் போது குறிப்பிட்டான்தொழிலை விட்டு. விட்டு. பொதுப்பணி செய்ய உத்திர விட்டதாக.

பொது பணி—பொது மக்கள் சேவை ஒருவர் கட்டளையிடுவதாலோ, ஒருவர் வேண்டுகோள் விடுவதாலோ வருவதல்ல. மற்றும் விண்ணப்பம் போட்டுப் பெறுவதுமல்ல. பொது சேவை இயற்கையாக, உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சியால்—ஆர்வத்தால் வருவது! ஆகவே நான் கட்டளையிட்டேன் என்று கூறுவது சரியல்ல! கிருஷ்ணனுக்கிருக்கும் இயற்கையான சுபாபத்தால் இன்று பொதுப் பணி செய்கிருன்!

தம்பி கிருஷ்ணன் வெறும் ஆர்வமுள்ளவன் மட்டுமல்ல! நிர்வாகத் திறமையும், ஆற்றலும் கொண்டவன். அவனுக்கிருக்கும் திறமையால், ஆற்றலால், கொள்கை பற்ருல், பொது நல சேவையால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் சட்ட மன்றத்திற்கு கட்சியின் சார்பில் நிற்கலாம், வெற்றியும் பெறலாம் ஏன் அப்படி வெற்றி பெற்ருல் நமதுஅறிஞர் அண்ணு அவர்கள் அமைச்சரவை அமைத்தால், தம்பி கிருஷ்ணன் ஒரு அமைச்சராகவும் ஆகலாம் ஏன்.

[9ம் பக்கம் பார்க்க]

நம் வளர்ச்சி-மாற்றுருக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது - அதனால் அழிக்க எண்ணுகிறார்கள்!

(எஸ். எஸ். ஆர். பேச்சு)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியமாகப் பார்க்கிறீர்கள் இது முடியாதா?

இன்று அமைச்சர்களாக இருப்பவர்களை விட கிருஷ்ணன் எந்த வகையில் குறைந்தவன், பேசத் தெரியாதவர்கள், அரசியல் பற்றி அறியாதவர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஏன். நமது மாநில அமைச்சர் கக்கனை விட எதில் குறைந்தவன். அவன் திறமையை, அனுபவத்தை இப்போது உங்கள் வட்டத்தில் பணியாற்றுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்! கிருஷ்ணன் மிக புத்திசாலி, நெஞ்சுறுதி கொண்டவன் ஆகவே அவனது சேவையை இந்த வட்டத்து மக்களாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

இன்று மாற்றுக் கட்சியார் நம்முடைய வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள்!

நம்மை மிகக் கேவலமாகத் தாக்கி வருகிறார்கள்!

வரும் தேர்தலில் நம்மை எப்படியும் தோற்கடிக்க வேண்டும், நம் கழகத்தை அழித்து ஒழிக்க வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கங்கணம் கட்டி விட்டார்கள்.

சென்ற தேர்தலில் நாம் முதன் முதலாக ஈடுபட்டோம்! தேர்தலில் நமக்குப் புது அனுபவம் அப்படி இருந்தும் 15 பேர்கள் வெற்றி பெற்றோம்.

வெற்றி பெறும் வாய்ப்பிருந்தும், சில வாக்குகளால் தோல்வியடைந்தோம்! தமிழ் நாடு முழுவதிலும் நாம் 200 ஓட்டுகளால் தோல்வியடைந்திருக்கிறோம்! 300 ஓட்டுகளால் தோல்வியடைந்திருக்கிறோம்! 500 ஓட்டுகளால் தோல்வியடைந்திருக்கிறோம்! நமக்கு வெற்றி பெறும் வாய்ப்பிருந்தும் வசதி இல்லாததால் தோல்வியடைந்தோம்!

சென்ற பொதுத் தேர்தலில் ஜாமீன் தொகை இழந்தவர்கள் மிகுந்த குறைவானவர்களே!

அதற்குப் பின் நாம் இன்று நல்ல முறையில் வளர்ந்து விட்டோம். மக்கள் நம் பக்கம் வந்து விட்டார்கள். இது கண்டு ஆளுங் கட்சியினர் எப்படியாவது இந்தத் தேர்தலுக்குள் நம்மை அழித்து விட, ஒழித்துக் கட்ட, நாம் தேர்தலிலேயே ஈடுபடாதவாறு செய்ய பல சதிகள் செய்து வருகிறார்கள். அதற்காக பல சாக்கடைப் பேர்களை வைத்து நம்மைத் தனிப்பட்ட முறையில் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். எங்கெங்கோ திரிந்த ரௌடிகளையும், நாலாம் தாரம் ஐந்தாம்தாரம் பேர் வழிகளையும் பிடித்து பத்திரிகைகளை ஆரம்பிக்கச் செய்து தங்கள் பேனாக்களில் சாக்கடையை ஊற்றி தூற்றச் செய்து வருகிறார்கள்.

விடிந்தெழுந்தால் எனது அண்ணன் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களையும் என்னையும் தாக்குவதையே பிழைப்பாக வைத்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் தாக்குவதென்ற ஈனப் புத்தி கொண்டு தாக்கி வருகிறார்கள்.

என்னென்னமோ பெயரால் பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்துவிட்டது, தாக்கி வருகிறார்கள்.

நமது மக்கள் உணர்ச்சியும், வீரமும், ஆர்வமும் கொள்வதற்காக நமது அண்ணா அவர்கள் தனது "அறிவு" என்னும் மையை ஊற்றி அதைக் கொண்டு எழுதி, நம்மை விழிப்படையச் செய்தார்... அதை வைத்து நமது கழகத்தை வளர்த்தார். அப்படிப்பட்ட இயக்கத்தை—அதிலுள்ள கொள்கை வீரர்களை — தெருவிலே திரிந்து வரும் இழிகுணம் படைத்தவர்களைக் கொண்டு தாக்கச் செய்து வருகிறார்கள்.

நாட்டிலுள்ள மக்கள் விழிப்படைந்து நல்வாழ்வு வாழ வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் ஒலி பெருக்கிகளமைத்து அழகு தமிழில் பேசி மக்களின் அன்பைப் பெற்று நல்ல பணி செய்து வரும் நமது கழகத்தையும், நமது தலைவர்களையும், நம்மையும், அரசியலே அறியாத சில அறிவிலிகள் ஒலி பெருக்கிகளை அமைத்து, நாம் வளர்த்த தமிழிலேயே நம்மை தரங்கெட்டுத்தாக்கச்செய்து வருகிறார்கள். அதைப் பார்த்து நாம் கவலைப்படவில்லை. அவர்கள் நிலை கண்டு பரிதாபப்படுகிறோம். அனுதாபப்படுகிறோம்.

நமது எதிரிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு நமது குடும்பங்களைப் பற்றி, நமது தலைவர்களைப் பற்றி ஆசை தீரத்திட்டுகிறார்கள்,

தேனாம்பேட்டையில் கூட்டம் கூடுவதற்கென ஒரு சிறுமை தனம் இருக்கிறது, அங்கு தான் எல்லாக் கட்சியினரும் கூட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள், இப்போது காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் கூட்டம் போடுகிறார்கள். மற்றவர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை.

சமீபத்தில் தேனாம்பேட்டையில் ஒரு காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது.

நான் என் வீட்டு மாடியிலிருந்து என்ன பேசுகிறார்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

அங்கு மிகவும் ஆபாசமாக இழிவாக, தரங்கெட்டு, தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினார்கள்.

அண்ணன் எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றிப் பேசும் போது மிகவும் கேவலமாகப் பேசினார்கள், என்னைப்பற்றியும் ஆபாசமாகப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டுவதாகப் பேசினார்கள், நமது அண்ணாவைப் பற்றி பேசும்போது ஜாதியைப் பற்றிக் கூறி தாக்கினார்கள். ஜாதியைப் பற்றிக் கவலைப்படாத நம்மை ஏன் ஜாதியைக் கூறித் தாக்க வேண்டும். ஏன் நமது அண்ணாவிற்கு ஏதாவது பெண் தரப்போகிறார்களா?

மற்றும் கலைஞர் கருணாநிதியைப் பற்றிப் பேசினார்கள். அப்படிப் பேசிக் கொண்டு வரும் போது யாரோ காங்கிரஸ்காரன் ஒருவன் பேசினான்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தில் இரண்டு கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இப்படியே போய்க் கொண்டிருப்பார்களானால் அவர்களை அடக்கி அழிப்போம். அவர்களைத் தீர்த்துக் கட்டுவோம்" என்று பேசியதுடன் "அந்த இரண்டு கலைஞர்களில் ஒருவனான எம்.ஜி. ராமச்சந்திரன் போக்கிரி மற்றொருவனை. ராஜேந்திரன் ரௌடி இந்தப் போக்கிரியையும். ரௌடியையும் எப்படி அடக்குவதென்று தெரியும். என்று அவன் பேசினான்.'

என் உள்ளம் துடித்தது. ரத்தம் கொதித்தது. தென்னகத்தில் மக்களின் நல்வாழ்விற்காக அரும்பாடுபட்டு வருபவரும், தென்னகத்து மக்களின் உள்ளன்பைப் பெற்றவருமான புரட்சி நடிகர் அண்ணன் எம். ஜி. ஆர். அவர்கள் "போக்கிரியாம்" அவரை ஒழித்துக் கட்டுவார்களாம் அவர்களிடம் ஆட்சி இருக்கிறதென்ற ஒரே ஆணவத்தில் இப்படிப் பேசுகிறார்கள். பேசட்டும்!

நமது கழகத்தில் இருக்கும் கட்டுப்பாட்டை உணர்ந்து எனது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டேன்.

இன்னும் பேசினான் அந்தக் காங்கிரஸ்காரன் இந்த இரண்டு பேர்களும் எங்கள் சிவாஜியைத் திட்டுகிறார்கள். இப்படித் திட்டினால் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என்றார்.

நாங்கள் எங்கே நண்பர் சிவாஜி கணேசனைத் தாக்கினோம். என்று அவர் இவர்கள் சிவாஜி ஆனார்.:

இப்படி பேசும் போது சில காங்கிரஸ் தலைவர்களும் இருந்தார்கள் கண்டிக்கவில்லை! ஆனால் நாம் அப்படிப் பேசினால் நமது தலைவர் அண்ணா கண்டிப்பார், நாவலர் கோபிப்பார்! அதற்குப் பயப்பட வேண்டியிருக்கிறது!

என்னையும், எனது அண்ணனையும் ரௌடி, போக்கிரி என்கிறார்கள். எதைக் கண்டு அப்படிச் சொன்னார்கள், இப்படிப் பேசி எங்களை அந்த நிலைக்குக் கொண்டு வரப் பார்க்கிறார்களா?

நாங்கள் ரௌடியாக வேண்டுமா? போக்கிரியாக வேண்டுமா, அந்த நிலை பார்க்க மாற்றார் விரும்புகிறார்களா? ஆனால் அப்படி ஆகும்படி எங்கள் கழகமும், எங்கள் தலைவர் அண்ணா, எங்கள் பொதுச் செயலாளர் எங்களைவிட மாட்டார்கள்!

எங்களுக்கு எங்கள் வழிகாட்டி, எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா மூன்று மந்திரங்களைக் கொடுத்துள்ளார்! கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, இதிலிருந்து நாங்கள் சிறிதும் நழுவ முடியாது!

ஆகவே எங்களை எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள், எப்படியானாலும் கூறிக் கொள்! நீ கூறுவதால் நாங்கள் அழிந்து விட மாட்டோம்! மக்களும் நீ கூறுவதை நம்ப மாட்டார்கள்!

ஒரு நல்லவன் வழியில் போய்க் கொண்டிருக்கிறான் அவனை ஒரு தீயவன் இதோ "ரௌடி போகிறான்" என்று கூறுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள், முதல் தடவைக் கூறினால் பேசாமல் போவான், இரண்டாம் முறை கூறினால் முறைத்துப் பார்ப்பான் மூன்றும் முறை கூறினால் இழுத்துப் போட்டு மிதிப்பான்! இது நாட்டில் நடைபெறுவது, ஆனால் எங்களை என்ன கூறினாலும் அந்த நிலை வராது. எங்களை வழி காட்டிச் செல்பவர் சாந்தசொரூபி, சாத்விகச் செம்மல் அறிஞர் அண்ணா ஆகவே. நீ, தூற்றும் வரை தூற்று'

ஆனால் அந்த இழிகுணம் படைத்தகாங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று மட்டும் கூற ஆசைப்படுகிறேன்.

நானோ அண்ணனோ போக்கிரியாகவோ, ரௌடியாகவோ வரமுடியாதா—உன் அக்கிரமங்களை, அயோக்கியத்தனங்களை ஒழிக்கும் திறமையில்லையா—எங்கள் மீது அன்புள்ள தென்னகத்து மக்கள் இல்லையா? எல்லாம் இருந்தும் நாங்கள் பொறுமையுடனிருப்பதற்கு எங்கள்கழகத்தின் கட்டுப்பாடு தான் காரணம் ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற பழமொழியை.

யானைக்குக் கோபம் வந்தால் காட்டையே அழிக்கும் நாங்கள் சாதுவாக இருக்கிறோம் என்றால் எங்களது கழகத்தின் கட்டுப்பாடு தான்!

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டில் நாகரீகத்தை வளர்த்து வருகிறது. நீங்கள் அநாகரீகமாக பேசினாலும் அதை அலட்சியம் செய்து வருகிறோம்!

இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகமெங்கும் வளர்ந்து வருகிறது! அதன் செல்வாக்கைக் குறைத்து வரும் தேர்தலுக்குள் அதை, அடக்க சதித் திட்டம் போட்டுத் தான் இப்படித்தாக்கி வருகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பல துணைமன்றங்கள் இருக்கிறது. எங்கும் அதன் ஆதரவாளர்கள் இருந்து வருகிறார்கள்! அவர்களது அன்பைப் பெற்றுள்ள தலைவர்களை, கலைஞர்களைத் தாக்கிப் பேசும் போது அந்தக் கூட்டத்திற்கு வந்துள்ள 5 பேர்கள் எழுந்து "எங்கள் தலைவர்களை இப்படி ஆபாசமாகப் பேசாதே" என்று கேட்டால் உடனே அவர்களைப் பிடித்து கிரிமினல் குற்றப்படி

(10ம் பக்கம் பார்க்க)

ஜனநாயகத்தை வளர்க்க வந்தவர்களே-ஜனநாயகத்தை அழிக்கிருர்கள் !

[எஸ். எஸ். ஆர். பேச்சு]

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தொடுத்து உள்ளே அனுப்பலாம் என்று சதி செய்தே இப்படிப் பேசுகிருர்கள் ஆகவே நமது தோழர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நமது கழகம் தென்னுடு தேய்கிறது வடநாடு வாழ்கிறது. என்று கூறுவதை கேலி செய்கிருர்கள். தென்னுட்டின் நலத்திற்காக இங்குள்ள அமைச்சர்தானைச் செய்வதற்கு எந்தவித அதிகாரமும் கிடையாது டில்லியிடம் மண்டியிட்டுக் கேட்டு உத்திரவு வாங்கித்தான் எதுவும் செய்ய முடியும் மாநில அமைச்சர்களுக்கு நகரசபை தலைவர்களுக்குள்ள அதிகாரமும் கிடையாது.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னகத்திற்கு ஒருவித நன்மையும் செய்யவில்லை.

பெரிய, பெரிய தொழிற்சாலைகள் அங்கு, பெரிய, பெரிய அணைக்கட்டுகள் அங்கு. வடநாட்டிலுள்ள மாநிலங்களெல்லாம் இன்று நல்ல வளத்தோடு இருக்கிறது இதை நாம் கேட்டால் நம்மை கேலியும், கிண்டலும் செய்கிருர்கள்.

ஒரு காங்கிரஸ்காரர் கூறினுர் ராணுவமும் போலீசும் எங்களிடம இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்து விடுவோம் என்று.

காந்தியார் பிறந்த நாட்டில், காந்தியார் வழியில் வந்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிறவர்கள், ஜனநாயகத்தை வளர்க்க வந்தவர்கள் இப்படிப் பேசுகிருர்கள். ராணுவமும், போலீசும் வைத்து நம்மை அடக்குவோம் என்ருல் இது நாடா, சுடுகாடா? சற்று யோசித்துப் பாருங்கள்.

அப்படிக் கூறிய சாந்தமூர்த்திகளுக்குஇப்படி அகம்பாவமாகப் பேசியவர்களின் சரித்திரத்தை நினைவுப்படுத்துகிறேன்.

எகிப்த்து நாட்டுச் சரித்திரத்தைச் சற்று யோசித்துப் பாருங்கள். அங்கு ராணுவ பலத்தோடும். போலீஸ் உதவியோடுமிருந்த "பரூக்" மன்னனின் கதி என்னவாயிற்று பரூக் மன்னனின் ராணுவம் நாசரிடம் வருவதற்கு எத்தனை நாளாயிற்று, எகிப்த்து நாட்டில் சர்வாதிகாரம் செய்து மக்களைக் கொடுமைக்குள்ளாக்கி வந்த பரூக் மன்னரின் கதியை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோன்று ப[illegible] நிலைமை என்னவாயிற்று? ராணுவத் தளபதி 'ஐயூப்க்கான் அந்த நாட்டை தன் வசமாக்கி அங்குள்ள அமைச்சர்களை, அதிகாரிகளை — கொடுமைக் காரர்களை ஒழித்தான் ஆகவே ராணுவத்தை—போலீசை வைத்து மிரட்டாதே.

எங்கள் தலைவர் அண்ணு அவர்கள் எந்தவித பலாத்காரமுமின்றி, ஜனநாயகத்திற்குப் பழுதின்றி, சாந்தமான முறையில் நாடு விடுதலையடையப் பாடுபடுகிருர். நாங்கள் அவரது அன்பு வழியைப் பின்பற்றி வருகிரேம். எங்களை யாரும் அழித்துவிட முடியாது, கடந்த பொதுத் தேர்தலில் நான் தேனீத் தொகுதியில் நின்றேன். நான் கழகக் கட்டளையையேற்று தேர்தலில் நின்றேன். அப்போது என்னிடம் காசே கிடையாது! என்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ்கரரர் பணபலம், அதிகாரபலம், அமைச்சர்கள் தயவு இவைகளைக் கொண்டு எதிர்த்தார். நான் எனது கொள்கைகளை வைதது நின்றேன்.

எல்லாவித செல்வாக்கோடு நின்ற காங்கிரஸ் அபேட்சகரைவிட, காசு இல்லாமல் கொள்கை ஒன்றையேவைத்து நின்ற நான் குறைந்த ஓட்டுகளைப் பெற்றுத் தோல்வியடைந்தேன். கழகம் புதிதாக தேர்தலுக்கு நின்ற நேரம் அது. எனக்கு இப்போதுள்ளது போன்ற வசதிகளும் இல்லை

தேனீ தேர்தல் தினத்தன்றுகூட ஓட்டுச் சாவடிகளைப் பார்வையிட்டு வரும் போது காங்கிரஸ்காரர் என்னை அறிவாள் கொண்டு வெட்ட முயற்சித்தார்கள். மதுரை முத்து தடுத்திராவிட்டால் இன்று என் பெயர் நமது கழகத்திற்காக உயிர்விட்ட தியாகிகளின் பட்டியலில் இருந்திருக்கும், மாநாட்டுப் பந்தலுககும் என் பெயர் வைக்கப்பட்டிருக்கும்.

வளர்ந்து வரும் நம்மை, மக்களின் அன்பைப்பெற்ற நம் கழகத்தை-தென்னகத்தின் விடுதலைக்காகப் பாடும்படும் ஒரே இயக்கமான நமது இயக்கத்தை பலாத்காரத்தால் அழித்துவிட எண்ணுகிருர்கள். தாக்குவதாலும், இழித்துப் பேசுவதாலும் அழித்து விடலாம் என்றுகனவு காண்கிருர்கள் இவைகளாலெல்லாம் ஒன்றும் செய்துவிட முடியாது எங்களது பணி மிகவும் வலிவானது. ஆகவே நீங்கள் அழித்துவிட முடியாது.

1962ம் தேர்தலில் எங்களை ஒழித்துக் கட்டிவிட்டு காங்கிரஸ் வெற்றி பெறலாம் என நினைக்கிறது. அந்த எண்ணம் பலிக்காது. எங்களது தலைவர்—அறிவுலக மேதை அறிஞர் அண்ணு எங்களுக்குக் கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு போதித்து வருகிருர் ஆகவே எங்களைஒன்றும் செய்துவிட முடியாது.

திராவிடநாடு விடுதலை அடைவதற்காக பல உயிர்கள் பலியாக வேண்டுமானுல் அதற்காக உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருக்கிருேம்.

இந்தியத்துணைக் கண்டத்தின் பிரதமர் நேரு ம தன்னகத்தாரை இழிவு படுத்திஞர் என்பதற்காக அவருக்குக் கருப்புக் கொடி காட்ட கழகம் ஆணை தந்தது.

அப்போது தலைவர்களெல்லாம் கைது செய்யப்பட்டார்கள். கலைஞர்களாகிய எங்களையும் கைது செய்து போலீஸ் வானில் கொண்டு போனுர்கள், அன்று நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தோம் திராவிடநாட்டு விடுதலைக்காச் சிறை செல்லும் வாய்ப்பு கிடைத்ததே என்று பூரிப்படைந்தோம். எனது அண்ணன் புரட்சி நடிகர் எம்.ஜி. ஆர். அவர்கள் என்னைக் கட்டி அணைத்து" தம்பி இன்று தான் நமக்கு பொருமை தரும் நாள். நம கொளகைக்காக சிறை செல்லுகிருேம்" என்று ஆனந்தக் கண்ணீர் விட்டார் ஆகவே எனது அண்ணன் எம். ஜி ஆர். அவர்களோ, நானே, மற்றும் எங்களைச் சார்ந்த கலைஞர்களே இழந்த நாட்டை பெற எந்த தியாகமும் செய்ய உயிரையும் கொடுக்க, ஏன் எங்களையே அர்ப்பணித்து விட்டோம். எந்த இன்னல் வந்தாலும் ஏற்கவும் தயங்க மாட்டோம்,

நாடாண்ட நாம், பலவித செல்வாக்கோடு வாழ்ந்த நாம், எல்லாவித வளங்கள் இருந்தும இன்று ஆண்டிகளாய், அடிமைகளாய் வடவருக்கு அடிமையாகி இருந்து வருகிருேம். நமது நாட்டை விடுதலையடையச் செய்ய எல்லோரும்தயாராக இருங்கள் நமதுகழகத்திற்கு எல்லாவித ஆதரவும் தாருங்கள் வாழ்க திராவிடம், திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்,

வணக்கம்!

நான் கண்ட தலைவர் பெரியாரே !

"நான் முதன் முதல் சேர்ந்தது சுயமரியாதை இயக்கம். அந்த இயக்கக் கொள்கைகள் என்னை ஈர்த்தது. அதைப் பின்பற்றியே இப்போது டணியாற்றுகிறேன்.

என்னைக் கவர்ந்த ஒரே ஒரு தலைவர் பெரியார், அவர் கூறிய கொள்கைகள் — இலட்சியங்கள் எனக்குப் பிடித்தது. அவரைப் பின்பற்றி பணியாற்றி வந்தேன்.

கொள்கையின் காரணமாக அவருக்கும், எனக்கும் மாறுபாடுகள் ஏற்பட்டாலும் எந்தக் கொள்கைகளுக்காக அவருடன் சேர்ந்து பணியாற்றினேனே அதை இன்று நாட்டில் பரப்பி வருகிறேன்,

என்னைப் பல மாற்றுக் கட்சிக்காரர்கள் தங்கள் கட்சிகளில் சேர்க்க முயற்சித்தார்கள்.

அவர்களிடம் கூறினேன், "நான் கண்ட ஒரே ஒரு தலைவர் பெரியார். என்னை ஈர்த்தது அவர் போதித்த கொள்கைகள்.

அதை நாட்டில் பரப்பி பணியாற்றி வருவேனேயொழிய மற்றொரு கட்சியில் சேரமாட்டேன் மற்றொரு தலைவரைப் பின்பற்ற மாட்டேன்.

—அறிஞர் அண்ணு

சட்டமன்றத்தில் அண்ணா பேசினால் அமைச்சர்கள் ஆவலோடு கேட்ப்பார்கள்!

சிரிக்காத மந்திரி பக்தவத்சலமே அன்று சிரிப்பார் !

வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது என்பதை காங்கிரசாரே லூதியானாவில் கண்டனர்!

சென்னையில் ஏ. கோவிந்தசாமி, இலட்சிய முழக்கம்

சென்னை இராயப்பேட்டை ஆல் தோட்டத்தில் 24-4-60ம் தேதி நடைபெற்ற கலைவளர்ச்சி மன்ற ஆண்டு விழாவிலும், நகர மன்ற உறுப்பினர் டி. என், கிருஷ்ணன் பாராட்டு விழாக் கூட்டத்தில் சென்னை சட்ட மன்ற உறுப்பினரும், கழகத் தலைவர்களில் ஒருவருமான ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசியதாவது.

அன்புள்ள தலைவர் அவர்களே தென்னகத்தின் பெரும் மதிப்பிற்குரிய இரு பெரும் கலைஞர்களே, பெரியோர்களே நண்பர்களே !

எனக்கு இந்தக் கூட்டத்தில் கலந்து பேசும்படியான நல்ல வாய்ப்பளித்தமைக்காக எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எனக்குப் பின் நமது அன்பிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமான இரண்டு கலைஞர்கள் பேசப் போகிறார்கள்.

நான் இன்று உங்கள் முன் பேசும்படியான நிலையிலில்லை. அவ்வளவு அலுப்புடன் வந்திருக்கிறேன். இதை நான் மேடையில் ஏறி வந்த நிலையைப் பார்க்கும் போதே கண்டிருக்கலாம்.

கடந்த இரண்டு தினங்களாக சென்னை சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிநாள் (ஹாஸ்டல் டே) கொண்டாடப்பட்டு வருகிறது

அதில் கட்சிபேதமின்றி மேல்சபை உறுப்பினர்களும், கீழ்சபை உறுப்பினர்களும், பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து விளையாடினோம். கயிறு இழுத்தல், ஓடுதல் போன்ற போட்டிகளில் நானும் கலந்து விளையாடினேன். ஒரு சில விளையாட்டில் வெற்றியும் பெற்றோம்.

மேல்சபை உறுப்பினர்களுக்கும், கீழ்சபை உறுப்பினர்களுக்கும் ஒரு போட்டி நடைபெற்றது. எங்கள் குழுவுக்கு சட்டமன்றத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் தலைவராக இருந்தார். அதில் நாங்கள் வெற்றி பெற்றோம். இப்போது பரிசு கொடுக்கும் விழா அங்கே நடைபெறுகிறது, நான் அவசியம் அங்கு இருக்க வேண்டும்.

என்னை இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்று கேட்ட போது எனக்கிருந்த அசௌகரியத்தைகூறி, இரண்டு பெரிய கலைஞர்கள் பேசும் போது நான் வரவேண்டியதில்லை. அவர்களே பார்த்துக் கொள்வார்கள் என்னை இன்று விட்டு விடுங்கள் என்று நண்பர் கிருஷ்ணனிடம் கூறினேன். அதற்கவர் நீங்கள் வந்து ஐந்து நிமிடம் பேசினால் போதும் என்று அன்பு கட்டளையிட்டார். அதை நிறைவேற்றவே இங்கு வந்துள்ளேன், நான் உங்கள் முன் அதிகநேரம் பேச முடியாத நிலையில் இருக்கிறேன். சிறிது நேரம் பேசி விட்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்,

முன்பு பொதுத்தேர்தலில் நிற்பதென முடிவு செய்தோம்,

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்திற்குச் சென்றால் என்னென்ன செய்யும் என்பதை மக்களிடம் தெரிவித்தோம். அதன்படி இன்று சட்டமன்றத்தில் பணியாற்றி வருகிறோம். மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளின்படி காரியங்கள் செய்து வருகிறோம்,

சென்ற பொதுத்தேர்தலின் போது நமது திராவிடமுன்னேற்றக் கழகம் பல சுவரொட்டிகளைத் தயார் செய்து எங்கும் பரவச் செய்தோம் அப்படி தயார் செய்த சுவரொட்டிகளில், வடக்கே பல தொழிற்சாலைகள் இருக்கிறதென்பதைக் காட்டுவதற்கும் தென்னகத்தில் ஒன்றும் செய்யவில்லை என்று தெரிவிப்பதற்கும் அனுகூலமாக "சிந்திரி அங்கே, முந்திரி இங்கே" என்று எழுதியிருந்தோம்.

இதைப் பார்த்ததும் பலர் கேலி செய்தார்கள், கிண்டல் செய்தார்கள்,

"என்ன இது, அடுக்குச் சொல் சட்ட மன்றத்திற்குப் போனால் என்ன செய்வோம் என்று திட்டம் தராமல் ஏதோ சிந்திரி முந்திரி" என்று நையாண்டி பேசினார்கள்.

நாம் சென்ற சட்ட மன்ற தேர்தலில் 117 பேர்கள் நின்றோம்! பதினைந்து பேர் வெற்றி பெற்றோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அங்கு நல்ல பணியாற்றி வருகிறோம்,

சென்ற பொதுத் தேர்தலில் நமது புரட்சி நடிகர் எம். ஜி, ஆர், அவர்கள் பெருந்தொண்டு செய்தார், தமிழகம் மெங்கும் சூறாவளி வேகத்தில் சுற்றி வந்தார். தினம் 5, 6 கூட்டம் பேசினார். ஒவ்வொரு கூட்டத்திலும் பத்தாயிரம், இருபத்தினாயிரம் மக்கள் கூடும். மாபெரும் கூட்டத்தில் பேசுவார். பல கூட்டங்களில் பேசும் போது ரத்தம் கக்கி இருக்கிறார். என் தொகுதியில் சுமார் 10 கூட்டங்களில் பேசினார், நான் வெற்றி பெறுவதற்காக அரும்பாடுபட்டார்.

நமது இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனும் சென்ற தேர்தலில் நல்ல பணிபுரிந்தார்! அவர் ஒரு தொகுதியில் நிறுத்தப்பட்டார் என்றாலும் ஓய்விருக்கும் நேரங்களில் பல இடங்களுக்குச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தார்!

பொதுவாக சென்ற தேர்தலில் கலைஞர்கள் நல்ல பணியாற்றினார்கள்.

நமது அண்ணா அவர்களும், பொதுச் செயலாளரும் ஓய்விருக்கும்போது பலவிடங்களுக்குச் சென்றார்கள்.

நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் தேர்தலில் வெற்றி பெறக் கூடாதென்பதற்காக பலமான வேலை செய்தார்கள்,

அவர் தொகுதியில் சென்று அவர் நாத்திகரென்றும், அவர் கடவுளுக்கு விரோதி என்றும் கூறி ஆஸ்திகப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் நமது கருணாநிதி நல்ல வாக்குகளில் வெற்றி பெற்றார்!

வடக்கு நம்மை இழிவு செய்து வருவதை நாம் கூறி வருகிறோம். அதை நல்ல முறையில் நாம் எடுத்துச் சொல்லும் காரணங்களை புரிந்து கொள்ளாததாலும் நம்மை கேலி செய்கிறார்கள். நம்மைப் பார்த்து "சிந்திரி—முந்திரி" என்று கிண்டல் பேசுகிறார்கள். காரணம் புரிந்துக்கொள்ள முடியாததால் நமது அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் புரியும்படி பேசுகிறார். அப்படிப் பேசியும் அவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

சட்ட மன்றத்தில் நமது அண்ணா அவர்கள் பேசும் போது தான் நிசப்தம் நிலவும் சட்ட மன்றமே நிரம்பி இருக்கும். எல்லோரும் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்க மிகுந்த ஆவலோடு இருப்பார்கள்! அண்ணா பேசுகிறார் என்று தெரிந்தால் முதல் நாளே அட்வான்சாக வெளியிலுள்ள காங்கிரஸ்காரர்கள் அனுமதி பெற்று விடுவார்கள். நமது தோழர்களுக்கு இடம் கூட கிடைக்காது!

மந்திரிகளெல்லாம் வந்து அண்ணாவின் பேச்சைக் கேட்கக் காத்திருப்பார்கள்,

மூதன் மந்திரி காமராசர் அண்ணா பேசுவதை முறைத்துப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருப்பார்.

எல்லாம் தெரிந்தவர் என்று தன்னை நினைத்துக் கொண்டு கிண்டல் பேச்சுப் பேசும் நிதி மந்திரி சுப்பிரமணியம் மிகுந்த ஆவலோடும், கவனத்தோடும் கேட்டுக் கொண்டிருப்பார்.

சட்டமன்றத்திலேயே சிரிக்காத ஒரு மந்திரி இருக்கிறார், அங்கு எது நடந்தாலும் "உம்" என்று முகத்தைவைத்திருப்பார். அவர் தான் மந்திரி பக்தவத்சலம் அவரே நமது அண்ணா பேச்சைக் கேட்டுக் கொண்டே சிரிப்பார்.

நமது அண்ணா பேச்சைக் கேட்ட பின்னும். வடக்காவது, தெற்காவது என்று கிண்டல் செய்வார்கள்,

வடநாட்டில் தொழில் வளம் மிகுந்து பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகிறது. ஆனால் இங்கு, செருப்புதைக்கும் தொழில், வத்திக்குச்சி செய்வது, அப்பளம் செய்வது இதுதான் தலையான தொழிலாகி இருக்கிறது. இது பற்றி நமது அண்ணா சட்டமன்றத்தில் பேசும் போது கேட்டால் சரியான பதில் சொல்லாது கேலி பேசுகிறார்கள்.

நீங்கள் வேண்டுமானால் சட்டமன்றத்திற்கு வாருங்கள் அங்கு மக்கள் நல்ல முறையில் வாழ்கிறார்கள்,

நான் வடநாட்டில் லூதியானா என்ற பகுதிக்குசென்றிருந்தேன் அங்கு மக்கள் நல்ல முறையில் வாழ்கிறார்கள்.

அங்குள்ளோர் பல தொழில்களில் ஈடுபட்டு மிக சுறு சுறுப்பாகக் காண்கிறார்கள். அங்கு ஆண்களும், பெண்களும் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் ஓய்வு நேரங்களில், வீட்டிலிருந்தே பல தொழில்களைச் செய்கிறார்கள்.

பெண்கள் ஓய்வு நேரங்களில் சட்டை தைத்தல், பனியன்கள் நெய்தல், சொட்டர்கள் தைத்தல் போன்ற பல பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

ஆண்கள் சைக்கிலுக்கு வேண்டிய சாமான்கள் செய்தல், கடிகாரம் ரிப்பேர் செய்தல், ரேடியோ சாமான்கள் செய்தல் சைக்கிலுக்குச் சாயம் போடுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மற்றும் பல தொழிற் சாலைகளில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள்.

நான் ஒரு வெற்றிலை பாக்குக் கடைக்காரனைச் சந்தித்தேன் அவன் ஓய்வு நேரங்களில் பல தொழில்களைச் செய்து வருகிறான்.

லூதியானாவில் எங்கும் தொழில் மயமாகவே இருக்கிறது.

அந்தப் பகுதியைப் பார்க்க என்னுடன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு, கருத்திரும்

(12ம் பக்கம் பார்க்க)

Registered asa a News Paper in CEXLON
Regd. No.M.7074 **MALAIMANI** விலை 16 காசு Phone No. 83285
இலங்கையில் 20 சதம்

நேரு மாநிலத்தில் 66 சர்க்கரை ஆலைகள் காமராஜர்-மாநிலத்தில் 6 ஆலைகள்!

(ஏ. கோவிந்தசாக பேச்சு)

(11ம் பக்கத் தொடர்ச்சி)

னும், திரு. தேனி தியாகராஜனும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. பழனிச்சாமியும், சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. பக்கிரிசாமி பிள்ளையும் வந்திருந்தார்கள்.

அவர்கள் எல்லாம் அங்குள்ள நிலைமைகளைப்பார்த்து பிரமித்து விட்டார்கள்.

லூதியானுவில் இருந்த ஒரு நண்பர் என்னைப் பார்த்து இங்கு பார்க்காது என்ன என்று கேட்டார்? எனக்கு அது விளங்கவில்லை! எல்லாம் பார்த்தோம் என்று சொன்னேன்; அதற்கவர் நீங்கள் பார்க்காதது ஒன்றிருக்கிறது.

அது தான் "பிச்சைக்காரர்களை"

இங்கு நீங்கள் பிச்சைக்காரர்களைப் பார்த்திருக்க முடியாது. அப்படிப் பார்த்திருந்தாலும் சென்னை மாகாணத்திலிருந்து வந்தவர்களைத் தான் பார்த்திருக்க முடியும் என்றார். நான் உடனே நண்பர் கருத்திருமனைப் பார்த்தேன், அவர் என்னைப் பார்த்தார்.

லூதியானுவில் பெரிய பெரிய தொழிற் சாலைகள் இருக்கிறது.

நான் மட்டும் மற்றுமொரு முறை வடநாட்டிலுள்ள ரிஷிகேசி என்ற ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கும் பிச்சைக்காரர்களைப் பார்க்க முடியாது. ஆனால் நோயாளிகளைப் பார்க்கலாம்.

குஷ்டரோகம் பிடித்தவர்கள் அங்கு நோய் குணமாவதற்கான காற்று வசதிகளும், மற்றும் இட வசதிகளும் இருப்பதால் பல இடங்களிலிருந்து வருகிறார்களாம்.

வடநாட்டில் பல இடங்களில் அகதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பாக்கிஸ்தான் முதலிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்கு உதவி செய்யப்படுகிறது.

ஆனால் பச்சைத் தமிழர் ஆட்சி புரியும் நமது மாநிலத்தில் இலங்கையிலிருந்து துரத்தியடிக்கப்படும் தமிழர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் கிடையாது. இதை உணராது "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று கூறினால் நம்மை நையாண்டி செய்கிறார்கள்!

சர்க்கரை ஆலை வைப்பதற்கு டில்லியிலிருந்து தான் அனுமதி வாங்க வேண்டும். நமது மாநில சர்க்காருக்கு அந்த அதிகாரம் கிடையாது! வட நாட்டில் ஏராளமான சர்க்காரை ஆலைகள் இருக்கிறது!

நேருவின் சொந்த மாநிலத்தில் சர்க்கரை 66 ஆலைகள் இருக்கிறது. ஆனால் காமராசர் மகாணமாகிய நமது மாநிலத்தில் 6 சர்க்கரை ஆலைகளே இருக்கிறது! நேரு சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது! காமராஜர் சர்க்காருக்கு அவர்களாகச் செய்வதற்கு எந்த அதிகாரமும் கிடையாது.

பீகார் மாநிலத்தில் 22 சர்க்கரை ஆலைகள் இருக்கிறது,

வடநாட்டாரை வால் பிடிக்கும் நமது காமராஜர் மாநிலத்தில் ஆறே ஆறு ஆலைகள் தான் இருக்கிறது!

நாம் வடநாடு வாழ்கிறது தென்னாடு தேய்கிறது என்பதை காரணத்தோடும்,புள்ளி விவரத்தோடும் கூறினால் வெட்கப்படுவதை விட்டு கேலி பேசுகிறார்கள்.

சிறு தொழில்களை நிறுவுவதற்கும் டில்லியிலிருந்து தான் அனுமதி பெற வேண்டும் இந்த மாநில சர்க்கார் அதிகாரமற்ற சர்காராக இருந்து வருகிறது,

நமது அறிஞர் அண்ணா அவர்கள் சிந்திரியில் அமைத்தது போன்று தொழிற்சாலை அமைக்காவிட்டாலும் முந்திரி தொழிலாவது வையுங்கள் என்று சொல்லும் போது அதை கேலி செய்தார்கள்.

ஆனால் இன்றோ முந்திரி செடி வைக்கத் திட்டமிட்டுவிட்டார்கள். அதற்காக பல லட்சம் செலவு செய்யப் போகிறார்கள்.

நமது அமைச்சர்களே இன்று முந்திரி செடி நடும் விழாவிற்குச் செல்லுகிறார்கள். செடி நடும் போது படம் பிடித்துக் கொள்கிறார்கள்.

அன்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இகழ்ந்தார்கள் இன்று வரவேற்கிறார்கள்.

நாம் எது சொன்னாலும் முதலில் கேலி செய்கிறார்கள். பின் அதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

வழக்கத்தில் இருந்து வரும் சொற்களுக்குத் தமிழ் சொற்களை உபயோகிக்க வேண்டுமென்று சொல்கிறோம் அதை கேலி செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தங்களை தமிழுக்காகபாடுபடுகிறவர்கள்என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

நம்முடைய அழகிய—தூய சொல்லான "திரு, திருமதி" என்ற சொல் இருக்கும் போது "ஸ்ரீ. ஸ்ரீமதி" என்ற சொல்லை உபயோகிக்க கூடாதென்று கூறினால் அதற்கும் முடியாதென்கிறார்கள். "வணக்கம்" என்ற நல்ல சொல்லிருக்கும் போது "நமஸ்காரம், நமஸ்தே" என்று சொல்லாதிகள் என்றால் அதையும் கேட்பதில்லை.

தமிழன் மீது பற்றுள்ள உத்தியோகஸ்தர் ஒருவர் வணக்கம் என்று கூறினால் உடனே "இவர் என்ன அந்த ஆள்களா" என்று கேட்டு கையாண்டி செய்கிறார்கள்!

தமிழ் சொற்கள் நமக்கு மட்டும் சொந்தமா? இவர்களுக்குச் சொந்தமில்லையா!

காவிரி நதியில் எண்ணை ஊற்று இருக்கிறது. அதை பரிசீலித்துப் பார்த்து அதைப் பயன்படுத்த வேண்டுமென்று நாம் கூறுகிறோம்.

அதற்கு நம்மை கிண்டல் செய்யும் முறையில் "அண்ணாதுரை வீட்டு கிணற்றில் தான் பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொன்னாகள் இப்போது அதை பரிசோதனை செய்யப் போவதாகக் கூறுகிறார்கள்;

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மாநிலத்திற்கு என்னென்ன செய்வது இவ்வளவு பணம் கேட்பது என்று யோசிப்பதற்கு சர்க்கார் கட்சியும், எதிர் கட்சித் தலைவர்களும் கூடி யோசித்தார்கள். அப்படி யோசித்தது ரகசியமாக அப்படி யோசிக்கும் போது நமது அறிஞர் அண்ணா அவர்கள் 1000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்தார்.

அதற்கான பல ஆதாரங்களையும், பல திட்டங்களையும் கூறியிருந்தார்.

அப்படி நமது அண்ணா அவர்கள் கொடுத்த திட்டத்தை எதிர் கட்சித் தலைவர்கள் ஆதரித்தார்கள்

நமது அண்ணா அவர்கள் 1000 கோடி கேட்டது நிலப்பரப்பை வைத்து, மக்கள் பெருக்கத்தை வைத்து, இங்குள்ள வசதிகளை வைத்து கேட்டார்.

இப்படி நமது அண்ணா அவர்கள் கேட்டது நியாயமானது, நேர்மையானது என்று மேல் சபையின் எதிர்க்கட்சி தலைவரும் அரசியல் மேதையான டாக்டர் எ. இலட்சுமணசாமி முதலியார் வரவேற்றார்.

சர்க்காரின் நிதி இலாகா காரியதரிசி திருவர்க்கீசும் நமது அண்ணா கூறியதைச் சம்மதித்தார். நமது அண்ணா கேட்பது நியாமென்று சொன்னார் சர்வகட்சிகளும் வரவேற்றது.

ஆனால் நமது அமைச்சர்கள் எதிர்க்கிறார்கள். கேலி செய்கிறார்கள்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்குத் திட்டம் தீட்டிக் கொடுப்பதே திரு. வர்க்கீஸ் அவர்கள் தான். அந்த வர்க்கீஸ் அவர்களே 1000 கோடி ரூபாய் வேண்டுமென்று நமது அண்ணா அவர்கள் கேட்டது சரியென்று வரவேற்கும்போது, மந்திரிகள் எதிர்க்கிறார்கள்.

அண்ணா 1000 கோடி ரூபாய் கேட்டார். சென்னை சர்க்கார் 500 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள்..

இன்னொன்றும் உங்களிடம் கூற ஆசைப்படுகிறேன். அதை கேட்டு நீங்கள் சித்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அண்ணா அவர்கள் 1000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று திட்டம் கொடுத்தது சர்வகட்சியினரின் ரகசியக் கூட்டத்தில் ரகசியமாக பேசியதை நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் பகிரங்கப்படுத்தியதுடன், நமது அண்ணா அவர்களைப் டண்டாரம் என்று கூறினார்,

சென்னை சட்டமன்றத்தில் இருக்கும் ஒரு பெண் அங்கத்தினர் எப்பொழுதும் நமது கழகத்தையும், நமது அறிஞர் அண்ணா அவர்களையும் தாக்கி வருவார். அவர்தான் திருமதி ராஜாத்தி குஞ்சிதம் என்பவர்கள். அவர்கள் நம்மைப் பற்றிப் பேசும் போது "சிந்திரி, முந்திரி என்று சில கந்திரிகள்" என்று துடுக்காகப் பேசினார். உடனே நமது கலைஞர் கருணாநிதி அவர்கள் அதற்குப் பதில் கூறும் போது "ஒரு சுந்தரி நம்மை கந்திரிகள் என்று கூறியது" என்றார். உடனே அப்படி துடுக்காகப் பேசிய அம்மையார் வாயடக்கிக் கொண்டார்கள் அவர்கள் 150 பேர்கள் இருந்தாலும் 15 பேர்களாகி எங்களிடம் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் பேசினால் அவர்கள் அடங்கி விடுவார்கள்.

திரு. ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் நான் சட்டசபையில் எவ்வளவு துடுக்கான முறையில் இருந்து வந்தேன். இப்போது இருக்க முடியாதா? முடியும். ஆனால், நாங்கள் ஏதாவது தவறான முறையில்போவது போன்று தெரிந்தால் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பார்வையால் எங்களை அடக்கி விடுகிறார். அண்ணா அவர்கள் இருந்தால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

எம் ஜி. ஆர். அவர்கள் என் தொகுதியில் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுப்பதாக கூறினார். அதன்படி நாடகம் ஆடிப் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுத்தார்.

வரும் தேர்தலில் நம்மைத் தோற்கடிக்க இப்போது சினிமா நடிகர்கள் பின்னால் காங்கிரசார் போக முற்பட்டு விட்டார்கள்,

சமீபத்தில் எகிப்து நாட்டுத் தலைவரை சிவாஜி கணேசனைக் கொண்டு வரவேற்கச் செய்தார்கள்.

இன்று மந்திரிகளெல்லாம் சினிமாப்பட விழாவில் கலந்து கொள்கிறார்கள் மந்திரி ஒருவர் "பாகப் பிரிவினைப் படம் மக்களுக்குப் படிப்பினை" என்றார். பராசக்தியில் படிப்பினை இல்லையா? ஆகவே இதெல்லாம் நம் வளர்ச்சியால் அவர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சியேயாகும்.

நமதண்ணா அவர்கள் சிவாஜி கணேசனுக்கு, சிவாஜி என்று பட்டம் கொடுத்தார், ஆனால் அதற்கு பதிலாக "பாரதி கணேசன்" என்றும், "கட்ட பொம்மன் கணேசன்" என்றும் பெயர் வைத்தார்கள். ஆனால் நிலைக்கவில்லை. கடைசியில் நமது அண்ணாவின் சிவாஜி பெயர் தான் நிலைத்தது!

நம்மை சினிமாக் கட்சி என்கிறார்கள் சினிமா நடிகர்களால் தான் நமது கழகம் வளர்கிறது என்கிறார்கள். ஆனால் கோவை மாநாட்டிற்கு சிவாஜியை அழைத்துக் கொண்டு போய் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

ஊர்வலத்தில் சிவாஜி கணேசனுடன் நின்று கொண்டு வந்தார்! முதலமைச்சர் அவர் நின்று கொண்டு வந்ததால் சிவாஜியைப் பார்க்க முடியவில்லை என்று நினைத்து, காமராசரை உட்கார வைத்தார்கள், உடனே காமராசர் சிவாஜியைப் பார்க்கத் தான் இவ்வளவு கூட்டமா என்று கேட்டார்,

நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் மேல் சபை அங்கத்தினராக வந்திருக்கிறார். வெற்றி பெறுவதற்கு எவ்வளவோ பாடுபட்டார்கள்! இன்று அவர் வெற்றி வாகை சூடிவிட்டார் அலறுகிறார்கள். இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றியும், வணக்கமும் கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும்: பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ்,
404, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5. அலுவலகம் 1-35, வாணியர் தெரு, சென்னை-14.